பக்கங்கள்: பதின்நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 பங்குனி 15 சனிக்கிழமை (28.03.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:122

# போர் இடைவெளி கோருகிறது ஐ.நா;

# அமெரிக்காவும் பிரிட்டனும் ஆதரவு

## பொதுமக்கள் வெளியேற உதவும் எனக் கருத்து

நியூயோர்க், மார்ச் 28

இலங்கை, முல்லைத்தீவில் போரில் சிக்குண்டுள்ள மக்கள் வெளியேறுவதற்கு வசதியாக இலங்கை அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் போர் இடைவெளி ஒன்றை நடைமுறைப்படுத்த சம்மதம் தெரிவிக்கவேண்டும்.

இவ்வாறு ஐக்கிய நாடுகள் சபை கோரிக்கை விடுத்துள்ளது அதனை அமெரிக்காவும் பிரிட்டனும் ஆதரித்துள்ளன.

(14 ஆம் பக்கம் பார்க்க)



## இலங்கைக்கு இராணுவ உதவி எதனையும் இந்தியா வழங்கவில்லை

### கடற்படைத் தளபதி சுரேஷ் மேத்தா சொல்கிறார்

இராமநாதபுரம், மார்ச் 28

கடற்படை உட்பட இந்திய ஆயுதப் படை எதுவும் இலங்கையில் விடுதலைப் புலிகளுடன் போர் புரியும் இலங்கைப் படையினருக்கு இராணுவ உதவிகள் எதனையும் வழங்கவில்லை.

இவ்வாறு இந்தியாவின் கடற்படைத் தளபதி அட்மிரல் சுரேஷ் மேத்தா இங்கு நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டின் போது தெரிவித்தார்.

எமது அயல்நாடுகள் சிலவற்றில் கடந்த காலங்களில் நடைபெற்ற தகராறுகளின் பின்னணியில் இந்தியக் கடற்படை எப்போதும் அவதானமாகவும் உன்னிப்பாகவும் இருக்க வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது உண்மைதான் என்றும் - அவர் கூறினார்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் வசம் மற்றொரு விமானம் உண்டா?

கொழும்பு, மார்ச் 28

விடுதலைப் புலிகள் வசம் மற்றும் ஒ விமானம் இருப்பதாக ஊகம் தெரிவிக்கப்படுவதை அடுத்து கொழும்பின் பாதுகாப்பு அதிஉச்ச நிலையில் வைக்கப்பட்டுள்ளது என்று பி.ரி.ஐ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

செக் தயாரிப்பான "சிலின் சற் 143"ரக சிறிய விமானமே அவர்கள் வசம் இருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன என்று மேலும் கூறப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் வசம் விமானம் இருப்பதை பொதுமக்களும் களப் புலனாய்வுக

(14 ஆம் பக்கம் பார்க்க)

## 18 மெற்றிக் தொன் வெங்காயம் இன்று தெற்குக்கு

யாழ்ப்பாணம், மார்ச்28

குடாநாட்டிலிருந்து 18 மெற்றிக்தொன் சின்ன வெங்காயம் ஏ-9 வீதியூடாக இன்று எடுத்துச்செல்லப்படவுள்ளது.

தனியார் வர்த்தகர்களுக்கான அத்தியாவசியப் பொருள்களுடன் வியாழக்கிழமை நாவற்குழிக்கு வந்து சேர்ந்த 20 லொறிகளும் இன்று காலை அங்கிருந்து புறப்படவுள்ளன.

இந்த லொறிகள் 18 மெற்றிக் தொன் வெங்காயமும் மற்றும் கருவாடு, மீன், பீற்றூட்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## 'உதயன்' மீதான தாக்குதலுக்கு 5 ஊடக அமைப்புகள் கண்டனம்

கொழும்பு, மார்ச் 28

யாழ்ப்பாணம் 'உதயன்' பத்திரிகை மீது நடத்தப்பட்ட கிரனேட் தாக்குதலுக்கு இலங்கையின் ஐந்து ஊடக அமைப்புகள் தமது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக அந்த ஊடக அமைப்புகள் இணைந்து வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

இலங்கையின் வடக்குப் பகுதியில் பிரபல ஊடக நிறுவனமான 'உதயன்' பத்திரிகை அலுவலகத்தின் மீது இனந்தெரியாத குழுவொன்று குண்டுத் தாக்குதலை நடத்தியுள்ளதை எமது அமைப்புகள் வன்மையாகக் கண்டிக்கின்றன.

'உதயன்' பத்திரிகை மீது நடத்தப்படும் முதல் தாக்குதல் அல்ல இது. இதற்கு முன்னர் பல சந்தர்ப்பங்களில் மிகக் கொடூர

(14 ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்பில் இரண்டு முனைகளில் படையினர் - புலிகள் தொடர்ந்து கடுஞ்சமர்

கொழும்பு, மார்ச் 28

முல்லைத்தீவில் புதுக்குடியிருப்பு, இரணைப்பாலை ஆகிய இருமுனைகளில் படையினருக்கும் விடுலைப் புலிகளுக்கும் இடையில் கடுஞ்சமர் தொடர்கின்றது எனப் படைத்தரப்பு அறிவித்துள்ளது.

வியாழக்கிழமை அதிகாலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை இருதரப்புகளுக்கும் இடையில் கடும் சண்டை இடம் பெற்றது. இரவு ஓய்ந்திருந்த சண்டை நேற்றுக்காலை மீண்டும் ஆரம்பமானது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

. விடுதலைப் புலிகள் அமைத்துள்ள சுரங்கப் பாதுகாப்பு அரண்களை உடைத்தெறிந்து படையினர் தாக்குதல் நடத்தி முன்னேறுகின்றனர். விடுலைப் புலிகளின் கடும் எதிர்தாக்குதல்களுக்கு முகம் கொடுத்து

(14 ஆம் பக்கம் பார்க்க)

## நேற்றைய கடும் ஷெல் தாக்குதல்களில் கர்ப்பிணிகள் நால்வர் உட்பட 61 பேர் பலி!

கொழும்பு, மார்ச் 28

பாதுகாப்பு வலயப் பிரதேசத்தில் மாத்தளன் கப்பல் வீதி, அம்பலவன் பொக்கணை, இடைக்காடு, வலைஞர்மடம், முள்ளி வாய்க்கால் ஆகிய இடங்கள் மீது படையினர் மேற்கொண்ட அகோர ஷெல் தாக்குதலில் 4 கர்ப்பிணிப் பெண்கள், சிசு உட்பட 61பேர் கொலையுண்டனர்: 164பேர் படுகாயமடைந்தனர் என இணையத்தளங்கள் தெரிவித்தன.

நேற்றைய தாக்குதல் குறித்து இணை

(14 ஆம் பக்கம் பார்க்க)

## பயங்கரவாதிகளின் அழுத்தம் காரணமாகவே கூட்டமைப்பு எம்.பிக்கள் பேச்சுக்களில் பங்குபற்றவில்லை

### சாடுகிறார் ஜனாதிபதி மஹிந்த

கொழும்பு, மார்ச் 28

பயங்கரவாதிகளின் அழுத்தம் காரணமாகவே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பேச்சுக்களில் பங்குபற்றவில்லை.

இப்படிக் கூறியுள்ளார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

அலரி மாளிகையில் நேற்று முன்தினம் தமிழ்- முஸ்லிம் கட்சிகளின் பிரதிநிதிக

(14 ஆம் பக்கம் பார்க்க)




மக்கள் மனம் ... தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாவகச்சேரி நகரில் உணவகம், பேக்கரியில்

# மனிதபாவனைக்கு ஒவ்வாத பொருள்களை விற்பனை செய்த இருவருக்கே விளக்கமறியல்

யாழ்ப்பாணம்,மார்ச்28

சாவகச்சேரி நகரப் பகுதியில் மனித பாவனைக்கு உதவாத உணவுப் பண்டங்களை விற்பனை செய்த உணவக உரிமையாளரும் மற்றும் பேக்கரி உரிமையாளரும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

சாவகச்சேரி நகரப் பகுதியில் உள்ள உணவகம் ஒன்றில் பழுதடைந்த பணிஸ் விற்பனை செய்யப்படுவது தொடர்பாக நுகர்வாளர் ஒருவர் வேகக் கடிதம் (Speed Mail)மூலம் நேற்று முன்தினம் சுகாதாரப் பகுதியின் கவனத்துக்கு கொண்டு சென்றிருந்தார்.

இதனை அடுத்து யாழ்.பிராந்திய உணவு மற்றும் மருத்துவ பரிசோதகர் த.மகாதேவன் தலைமையில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் குழு உடனடி நடவடிக்கையில் இறங்கியது.

குறிப்பிட்ட உணவகத்தில் இருந்து மனித நுகர்விற்கு பொருத்தமில்லாத -பழுதடைந்த பணிஸ்களை கைப்பற்றிய சுகாதாரப் பகுதியினர் அந்த பணிஸ்கள் உற்பத்தி செய்யப்பட்ட பேக்கரியையும் சோதனைக் குட்படுத்தினர். பேக்கரியிலும் சுகாதாரக் குறைவான நிலைமை அவதானிக்கப்பட்டது.

உணவக உரிமையாளரையும், பேக்கரி உரிமையாளரையும் கைது செய்த சுகாதாரப் பகுதியினர் இருவரையும் நேற்று சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்தனர். எதிர்வரும் திங்கட்கிழமை வரை இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

(1-2-207)


**ALLIANCE FRANCAISE DE JAFFNA**
83, Palaly Road Kantharmadam,Jaffna.
phone: 021 2228093
E-mail: alliancejaffna@Yahoo.com

**Learn French the French Way**
**French Classes**

இலங்கையிலுள்ள பிரெஞ்சு தூதரகத்தின் மூலமும், Alliance Francaise de Paris இன் ஊடாகவும் சர்வதேச மொழியான பிரெஞ்சுமொழி வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன.
ஆசிரியர்கள்: பிரான்ஸியரும், பிரெஞ்சில் தேர்ச்சி பெற்றோர்களும்.
பரீட்சையில் சித்தியடைபவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.
ஆரம்பம்: சனிக்கிழமை (04.04.2009) மு.ப. 11 மணிக்கு
பதிவுகளை உடன் மேற்கொள்ளவும். கட்டணம், ஏனைய விவரங்களை நேரில்/தொலைபேசியின் ஊடாக பெறலாம்.



அளவெட்டி - மல்லாகம் ப.நோ.கூ.சங்கம் (வ-து)

**கேள்வி கோரல்**

எமது சங்கத்தினால் ஆரம்பிக்கப்படவுள்ள சிறப்பு விற்பனை நிலையங்களுக்கு (மினி கோப் சிற்றி) வர்ணம் பூசுதல், கட்டடம் திருத்தம் செய்தல், ராக்கைகள் அமைத்தல், மின் இணைப்பு வேலை ஆகியவற்றுக்கான தங்களது கேள்வி விண்ணப்பங்களை எமக்கு 02.04.2009 இற்கு முன்னர் நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
திருத்தம் செய்ய வேண்டிய இடங்கள்
1. கிளை 1 - அளவெட்டி மத்தி
2. கிளை 3 - அளவெட்டி தெற்கு
3. கிளை 9 - கல்லாரை, மல்லாகம்
மேற்படி கட்டட வேலைகள் தொடர்பான விவர அட்டவணையை காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பொது முகாமையாளர்,
அளவெட்டி - மல்லாகம் ப.நோ.கூ.சங்கம்.



**வைத்திய சேவை**

வாதரோகங்கள், சருமரோகங்கள், ஆஸ்த்மா, நீரிழிவு, உடல் பருமன், தலைமுடி உதிர்தல், தலைமுடி நரைத்தல், தைறோயிட், குழந்தைகளின் ரோகங்கள் மற்றும் நாட்பட்ட வியாதிகளுக்குச் சிறந்த சிகிச்சை அளிக்கப்படும்.
டாக்டர் த.சிவானந்தன்
"கோப் கிளினிக்",
இல.5, வைமன் வீதி, நல்லூர்.



**கோழிக்குஞ்சுகள் விநியோகம்**

Bahira புறொயிலர் குஞ்சுகள் இன்று 28.03.2009 விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.
★ றாஜீவ் - நாவலி வீதி, ஆனைக்கோட்டை.
★ சிற்றிபாம் றேடர்ஸ் - கல்வியங்காடு.
★ திருமகள் களஞ்சியம் - சிவலிங்கப்புளியடி.
★ கோல்டன் பாம் - பருத்தித்துறை.
★ P.ரவி - சாவகச்சேரி.
★ மதுரா - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.



**இறைச்சிக் கோழி விற்பனைக்கு**

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. 50/= ரூபாவால் குறைக்கபட்டுள்ளது.
★றாஜீவ் - குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.



**தவறிவிட்டது**

27.03.2009 காலை 6.30-7.00 மணிக்கு இடையில் நவிண்டிலுக்கும் மாலுசந்திக்குமிடையில் Nokia ரக கைத் தொலைபேசி தவறிவிட்டது. இலக்கம் 0779848134. எடுத்துத் தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு:- வே.வன்னிமரம்,
கிராம அலுவலர் - வல்வெட்டித்துறை.



**மணமகள் தேவை**

யாழ்.இந்து கௌரவ சைவ போசனமுள்ள, 33 வயதுடைய, செவ்வாய்க் குற்றமற்ற, கிரக பாவம் குறைந்த, MPhil. படித்த, பல்கலைக்கழகத்தில் நிரந்தர நியமன விரிவுரையாளராக கடமையாற்றும் தமது மகனுக்கு பெற்றோர் பட்டதாரி அல்லது அதற்கு ஏற்ற கல்வித் தகைமை உள்ள மணமகளை எதிர்பார்க்கின்றனர்.
தொடர்பு:- 077-3053249


## திருமண பொன்விழா வாழ்த்து
### 50 ஆவது ஆண்டு



இறை ஆசியுடன் இல்லற வாழ்வில்
50 ஆண்டுகள்
நிறைவு காணும்
எமது அன்புப் பெற்றோர் மேலும்
பல்லாண்டு காலம் வாழ
வாழ்துகின்றோம்.

இறைவனின் வழியில் நடப்போரை-அவர் கைவிடுவதில்லை.

**திரு. திருமதி அந்தோனிப்பிள்ளை - இராசம்மா**

130, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பெறாமக்கள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

மண் மகிழ
01 ★ 11 ★ 1955



மனம் நெகிழ
27 ★ 02 ★ 2009

**அமரர் செல்லையா ஜெயானந்தம்** (ஜெயம்)

அன்பு மொழி பேசி அரவணைத்து எம்மை
பண்புடனே உயர்த்தி பயன் பெறவும்வைத்து
பாரினிலே எம்மை எல்லாம் பரிதவிக்கவிட்டு - நீங்கள்
பரமசிவன் பாதாரம் சென்றதேனோ?
உங்கள் நினைவுகள் என்றும் எம்மனத்தில்
நிறைந்திருக்கும்.

27.02.2009 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத்தலைவர் யாழ். போதனா வைத்தியசாலையில் நோயுற்று இருந்தபோது சிகிச்சை அளித்த புற்றுநோய்ப்பிரிவு வைத்தியர்கள், தாதிமார் மற்றும் சுகாதாரத்துறைசார் ஊழியர்கள் அனைவருக்கும் "CANE" அமைப்பிற்கும் அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்து நேரிலும், தொலைபேசிமூலமும், துண்டுப்பிரசுரங்கள் மூலமும் கண்ணீர் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் மற்றும் ஆறுதலும் பல வகைகளில் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதுடன் இன்று (28.03.2009) சனிக்கிழமை மு.ப. 10 மணியளவில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*'இராணிவாசம்',*
*டச்சு றோட், சித்தன்கேணி.*

குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னை மடி
14 ★ 04 ★ 1942



இறைவன் அடி
26 ★ 02 ★ 2009

**திருமதி திவாகரமூர்த்தி பாக்கியலட்சுமி** (சின்னமணி)

அம்மா என்று அழைக்க இனி யாரிந்த பூமியில்
உள்ளார் அம்மா!
வீடெல்லாம் உனது குரலும் சிரிப்பும் சேர்ந்து எம் இதயத்தை
துளைத்தெடுக்கிறதம்மா!
பெற்ற பிள்ளைகளை கண்ணை இமை காப்பது போல முத்தாக
காத்த எங்கள் அருமை அம்மா
திடீரென ஏன் அம்மா எம்மை விட்டு ஆண்டவனிடம் போனாய்?
நீங்கள் எம்முடன் பல ஆண்டுகள் இருப்பீர்கள்
என்று நினைத்து ஏமாந்து போனோம்.
உங்கள் உடல் எம்மைவிட்டு பிரிந்தாலும் உங்கள்
உருவம் அணையாத ஒளிவிளக்காய் ஒளிரும் அம்மா!

கடந்த 26.02.2009 அன்று எம்மை விட்டுப் பிரிந்த எமது குடும்பத் தலைவியின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (28.03.2009) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும், இந்த நிகழ்வில் பங்குகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் பங்கு கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
குறிப்பு:- அழைப்புக் கிடைக்காதவர்கள் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# ஒழுங்கு மாறிய முயற்சி

அரசியல் தீர்வு தொடர்பாகப் பேசுவதற்கு வருமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச விடுத்த அழைப்பை நிராகரித்து, நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரசியல் கட்சிகளின் மகா நாட்டைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் புறக்கணித்து விட்டனர்.

மகாநாட்டில் தாம் பங்குபற்றாமைக்கான காரணத்தை ஜனாதிபதிக்குத் தெளிவுபடுத்திக் கடிதம் ஒன்றை அவர்கள் அனுப்பியிருந்தனர்.

இந்தச் சந்திப்பில் ஆராயப்படவேண்டிய விசேடமான அரசியல் விவகாரங்கள் குறித்து விசேடமாகக் குறிப்பிடப் படவில்லை. வெறுமனே, நாட்டில் நிலவும் அரசியல் சூழ்நிலை குறித்து ஆராய்வதற்கான விருப்பத்தை வெளியிட்டிருந்தீர்கள் என்று அந்தக் கடிதத்தில் தெரிவித்திருந்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒரு பகுதியில் இடம்பெயர்ந்துள்ள 3 லட்சம் மக்கள் தொடர்பாகத் தோன்றியுள்ள பாரிய மனிதாபிமான நெருக்கடி குறித்து எதுவும் கூறவில்லை என்பதையும் தமது கடிதத்தில் கூட்டமைப்பினர் 'தடித்த எழுத்தில்' வடித்திருந்தனர். அதற்கப்பால், அந்தக் கடிதத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தின் மனிதாபிமான நெருக்கடி குறித்த விடயங்களே, அம்சம் அம்சமாக விவரிக்கப்பட்டுள்ளன. அங்குள்ள மக்கள் இறந்தொழிவது குறித்தும், அவர்கள் அனுபவிக்கும் துன்ப துயரங்கள், அவலங்கள் மற்றும் கிடையாமை குறித்த விவரங்களே ஜனாதிபதிக்கு எழுதிய அக் கடிதத்தின் பெரும் பகுதியில் முன்வைக்கப்பட்டிருக்கின்றன.

கடிதத்தின் இறுதிப் பகுதியில் -

வன்னியில் நிகழக்கூடிய மனிதப் பேரவலத்தை நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது.

மொத்தத்தில் வன்னி மக்கள் குறித்த ஒரு 'நிலைமை அறிக்கை' யை ஜனாதிபதிக்கு கூட்டணியினர் அனுப்பியுள்ளனர். தமிழ்ப் பொதுமக்கள் பாரிய மனிதாபிமான நெருக்கடியில் சிக்கியுள்ள நிலையில் ஜனாதிபதியின் கடிதம் கிடைத்துள்ளதாகவும் மனிதாபிமான நெருக்கடியைத் தடுத்தபின்னரே, அரசியல் தீர்வு சம்பந்தமான பேச்சு நடைபெறுவது பொருத்தமென்றும் எடுத்துக்காட்டியுள்ளனர்.

இந்த மட்டில், தமிழ்மக்களால் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் என்றவகையில், அவர்கள் நியாயமாக, நிதானமாகச் செயற்பட்டிருக்கிறார்கள் என்பதனைத் தமிழ்மக்கள் ஏற்றுக்கொள்வர் எனக் கொள்ளலாம்.

வீடு பற்றி எரியும்போது, பிடில் வாசித்த நீரோ மன்னனாக அன்றி, வீடு நாசமாவதை - சாம்பராவதைத் - தடுக்க வேண்டும் என்பதில் அக்கறைகொண்டுள்ளமை ஏற்கத்தக்கதே. தமிழ் மக்களின் சார்பில் பேசவல்ல சக்தியை அவர்கள் வீணடிக்கவில்லை. எதற்கு முன்னுரிமை அழிக்கப்பட வேண்டுமோ - அதாவது தீ மூண்டுள்ள வீட்டின் நெருப்பை அணைத்து சேதத்தைத் தவிர்த்தாலே அதனைப் புனரமைத்துப் பிள்ளைகளின் திருமணத்தை அங்கு நடத்த இயலும் - நடத்த வேண்டும் என்று கறள் ஏறாத தராசு போல சரியாக அளந்து செயற்பட்டிருக்கிறார்கள்.

தமிழ் மக்கள் படும் அவலங்களையும் அனுபவிக்கும் அநீதிகளையும், அவர்கள் மூன்றாம் தரப் பிரசைகளாக வாழ்வதிலிருந்தும் தோஷம் நீங்கியவர்களாக தமது அரசியல் உரிமைகளை அனுபவிக்க வகைசெய்யும் அரசியல் தீர்வு ஒன்று அத்தியாவசியம் என்பதற்கு எதிர்க்கருத்து இருக்கமுடியாது.

ஆனால், இன்றைய கட்டத்தில் முதலில் தேவைப்படுவது தமிழ்மக்களை அழிவில் இருந்து காப்பாற்றுவதே ஆகும். சுவர் இருந்தால் மட்டுமே சித்திரம் தீட்ட முடியும். மகாநாடு என்ற காற்றலையில் எந்த ஓவியனாலும் வர்ணப்படம் கீறமுடியாது. இந்தப் பெரும் உண்மையை மறந்து தமிழர்களின் இன்றைய நெருக்கடியான நிலையை மறைத்து வைத்துவிட்டு, அரசியல் தீர்வுக்காகப் பேச்சு நடத்துவது என்பது உலகம் தமிழர் நிலை குறித்து கொண்டுள்ள கவலையை, போலித்தனமாகத் துடைத்துவிடும் முயற்சி என்பதனை எந்தத் தரப்பினர் வெளிப்படுத்திக் கூறமுன்வராவிடினும், தமிழ் மக்கள் புத்திபூர்வமாக உணர்ந்துகொள்வர்.

முல்லைத்தீவில் மனிதப் பேரவலம் ஒன்று நிகழப்போகிறது என்று ஐக்கிய நாடுகள் சபையும், பல உலக நாடுகளும் சர்வதேச மனிதாபிமானத் தொண்டு நிறுவனங்களும் அச்சம் வெளியிட்டும், எச்சரிக்கை செய்தும் வரும் இந்தத் தருணம் பார்த்து, ஆண்டிகள் கட்டும் மடமாக அரசியல் தீர்வு குறித்துப் பேசுவது வீணே பொழுதைப் போக்குவதற்கு ஒப்பானதே. அத்தோடு இது ஒழுங்கு நிரல் மாறிய ஒன்று.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கென உருவாக்கப்பட்ட அனைத்துக் கட்சி மாநாடு கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக நூற்றெட்டுத் தடவைகள் கூடியும் நடைமுறைச் சாத்தியமான எந்த உருப்படியான யோசனையையும் சாதகமான சிபார்சுகளையும் முன்வைக்காத நிலையில் -

தமிழர் தரப்புக்களை மட்டும் அழைத்துப் பேசி உடனடியாக உகந்த தீர்வு ஒன்றைக் 'கண்டுபிடித்து' விடலாம் என்று காட்ட விழைவது -

அரசாங்கம் உலகத்துக்கு கூறிவரும் பொய்மைக்கு சாட்சி கூறுவதற்கே என்பதில் சந்தேகம் இல்லை. வேலிக்கு ஓணானைச் சாட்சி வைக்கும் தந்திர முயற்சி என்பதனை எவரும் இலகுவாகப் புரிந்து கொள்வர்.

தமிழர் விவகாரத்தில் அவர்களுக்குரிய, உகந்த அரசியல் தீர்வு ஒன்றினை வழங்க வேண்டும் என்பதில் மகிந்த அரசுக்கு மனதார்ந்த, முழுமையான விருப்பம் இருப்பின்-

வன்னிப் பேரவலத்தை நீக்குவதற்குத் தேவையான உகந்த நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும். முதலில் தமிழ் இனம் அழிவதைத் தவிர்க்க ஏதுவான வழிமுறைகளைச் செயற்படுத்தவேண்டும்.

அதன் பின்னர், உடனடியாக அரசியல் தீர்வு ஒன்றை காண்பதற்கு மனச்சுத்தியுடன், கபடமில்லாச் சிந்தையுடன் செயலில் இறங்கவேண்டும். அது நேர்மையான முயற்சியாக அமையின் கூட்டமைப்பினரைத் தமிழ் மக்களே உந்தித் தள்ளி அதற்கான முயற்சியில் இறங்கத் தூண்டுவர்; அனுமதிப்பர்.

# நலன்புரி நிலையங்களுக்கென தனியாக வழங்குவதற்கு போதிய அம்புலன்ஸ் வண்டிகளோ, சாரதிகளோ இல்லை

## இருப்பதை வைத்தே சேவையாற்றுகின்றோம் என்கிறார் டாக்டர் நந்தகுமாரன்

யாழ்ப்பாணம், மார்ச் 28

விடுவிக்கப்பட்ட பகுதிகளில் இருந்துவந்த பொதுமக்கள் தங்கியுள்ள நலன்புரிநிலையங்களுக்குத் தனியாக அம்புலன்ஸ் வண்டிகளை வழங்குவதற்கு எம்மிடம் மேலதிகமாக அம்புலன்ஸ் வண்டிகளோ, சாரதிகளோ இல்லை. இச் சேவையை ஏற்கனவே உள்ள இடர்களின் மத்தியிலேயே நலன்புரி நிலையங்களுக்கும் விஸ்தரிக்க நேர்ந்துள்ளதென யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பதில் பணிப்பாளர் வைத்திய கலாநிதி க.நந்தகுமாரன் அறிவித்துள்ளார்.

கடந்த 26ஆம் திகதி உதயனில் வெளியான 'யாழ். போதனா வைத்திய சாலைக்கு தனியார் வாகனத்தில் நோயாளர்கள்' என்ற தலைப்பில் வெளியான செய்தி குறித்து அனுப்பியுள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

நலன்புரி நிலையங்களில் வசிக்கும் மக்களின் நலன் கருதி சுகாதார சேவைகளை அங்கு வழங்கும் பொருட்டு தினந்தோறும் ஒரு வைத்தியர் சென்று நோயாளர்களைப் பார்வையிட்டு வருகின்றார். அதன்போது உள்ளக விடுதிகளில் சிகிச்சை பெறத் தேவையானவர்கள் மட்டும் அம்புலன்ஸ் வண்டியில் அழைத்துவரப்பட்டு சாவகச்சேரி வைத்தியசாலை, கொடிகாமம் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை முடிவடைந்ததும் மீண்டும் நலன்புரி நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

ஏனைய நேரங்களில் அவசர சிகிச்சை தேவை எனக் கருதும் நோயாளிகளை நலன்புரி நிலையங்களில் இருந்து கிடைக்கும் அழைப்புக்களுக்கு ஏற்ப ஏற்றிவர நேரிடுகின்றது. எனினும் தேவையானவர்கள் மட்டுமே உள்ளக விடுதிகளில் அனுமதிக்கப்படுகின்றனர். இடம்பெயர்ந்து வாழும் மக்கள் சாதாரணமான மக்களைப் போல வைத்திய நிலையங்களை நாடமுடியாது உள்ளமையினால் இச்சேவை இன்றியமையாதது எனக் கருதுகின்றோம். இச் சேவைக்காக கொடிகாமம் வைத்தியசாலையில் உள்ள அம்புலன்ஸ் வண்டியும் மற்றும் சாவகச்சேரி வைத்திய சாலையில் உள்ள அம்புலன்ஸ் வண்டிகள் பயன்படுத்தப்படுகின்றன. மேற்படி இரண்டு அம்புலன்ஸ் வண்டிகளும் இல்லாத போது அவசர அம்புலன்ஸ் சேவைக்குரிய அம்புலன்ஸ் இலவசமாக அனுப்பிவைக்கப்படுகின்றது.

அவசர தேவைகளை எம்மால் எதிர்வு கூறமுடியாமல் இருப்பதனால் ஏதாவதொரு அம்புலன்ஸ் வண்டி இல்லாத சந்தர்ப்பங்களில் மற்றைய அம்புலன்ஸ் வண்டியை அழைப்பித்து வைத்திசாலைகளுக்கு இடை நோயாளிகளை இடம்மாற்று[illegible] சகல வைத்தியசாலைப் பொறுப்பு வைத்திய அதிகாரிகளுக்கும் பணிக்கப்பட்டுள்ளது - என்றுள்ளது (50)

# புதிய சாரதி அனுமதிப்பத்திரம் நேற்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது

கொழும்பு, மார்ச் 28

கணனி மயப்படுத்தப்பட்ட புதிய சாரதி அனுமதிப்பத்திரம் நேற்று வெள்ளிக்கிழமை அறிமுகம் செய்து வைக்கப்பட்டதாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

உயர் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி சகல தகவல்களையும் உள்ளடக்கிய இப்புதிய சாரதி அனுமதிப்பத்திர விநியோக நடவடிக்கைகளை பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க நேற்றுக்காலை ஆரம்பித்துவைத்தார்.

போக்குவரத்து அமைச்சர் டலஸ் அழகப்பெருமவின் தலைமையில் கொழும்பு, வேரஹேரயிலுள்ள மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற இது தொடர்பான வைபவம் நடைபெற்றது.

'ஸ்மார்ட் கார்ட்' எனும் பெயரிடப்பட்ட இந்த சாரதி அனுமதிப் பத்திரத்தில் தேசியக்கொடி, அரசாங்க இலச்சினை, சாரதியின் புகைப்படம் இரகசிய தகவல்களை சேகரிக்கும் அடையாளம், சாரதியின் பெயர் தொடர் இலக்கம் பிறந்த திகதி விநியோகிக்கப்படும் திகதி காலாவதியாகும் திகதி விநியோகித்த உத்தியோகத்தர், அடையாள அட்டை இலக்கம் மற்றும் வாகனங்களின் வகைகள் போன்ற விவரங்கள் உள்ளடக்கப்பட்டிருப்பதாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்கழத்தின் பிரதி ஆணையாளர் நாயகம் அநுராத விஜேயதுங்க தெரிவித்தார். (50)

# இலங்கை வங்கி மேற்தரக்கிளையில் சனிக்கிழமை சேவை வழமைபோல்

யாழ்ப்பாணம், மார்ச் 28

இலங்கை வங்கி யாழ். மேற்தரக் கிளையில் சனிக்கிழமை வங்கிச் சேவை வழமைபோல் இடம்பெறும் என்று பதில் பிரதம முகாமையாளர் அறிவித்துள்ளார்.

வாடிக்கையாளர்கள் தமது பணிகளை மேற்கொள்ளலாம் என்று அவர் தெரிவித்தார். (1)

## அருணலு சேமிப்புக்கணக்கை பேணும்

# புலமைப்பரிசில் சித்திபெற்ற 46 மாணவர்கள் இன்று கௌரவிப்பு

கரவெட்டி, மார்ச் 28

கொமர்ஷல் வங்கியில் அருணலு சிறுவர் சேமிப்புக் கணக்கைப் பேணும் கடந்த ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 46 மாணவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்த நிகழ்வு இன்று சனிக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு நெல்லை முருகன் திருமண மண்டபத்தில் முகாமையாளர் எஸ்.கே.குணசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வை.செல்வராசா பிரதம விருந்தினராகவும் கரவெட்டி பிரதேச செயலாளர் சி.சத்தியசீலன், கோட்டக்கல்விப் பணிப்பாளர் க.அம்பலவாணர், பருத்தித்துறை இராம கிருஸ்ண ஸ்ரீசாரதா சேவாச்சிரமத் தலைவர் சுவாமி சித்ரூபானந்தா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (204-70)

# அரசியல்தீர்வு, வன்னி நிலைமை தொடர்பாக தமிழ் - முஸ்லிம் கட்சிகளுடன் ஜனாதிபதி ஆலோசனை

கொழும்பு,மார்ச் 28

அரசியல் தீர்வு தொடர்பாக அலரி மாளிகையில் நேற்றுமுன்தினம் மாலை ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கலந்துகொள்ளாத போதும் -

ஏனைய தமிழ்-முஸ்லிம் கட்சிகளுடன் ஜனாதிபதி ராஜபக்ஷ விரிவாக பேச்சுக்களை நடத்தினார்.

அரசியல் தீர்வு விடயத்திற்கு புறம்பாக வன்னி நிலைமை,யாழ்ப்பாணத்திலும் வன்னியிலும் தேர்தல் நடத்துவது ஆகியன தொடர்பாகவும் இச்சந்திப்பில் ஆராயப்பட்டுள்ளது.

அலரிமாளிகையில் நேற்றுமுன்தினம் மாலை 6.30 மணி தொடக்கம் சுமார் 2 மணித்தியாலங்களாக நடைபெற்ற இச் சந்திப்பில் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகள் மாத்திரமன்றி நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்காத கட்சிகளும் கலந்துகொண்டன.

ஜனாதிபதியுடன் அரசாங்கத் தரப்பில் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க, அமைச்சர்களான நிமால் சிறிபால டீ சில்வா, டலஸ்அழகப்பெரும, சுசில் பிரேமஜயந்த, மகிந்த சமரசிங்க, விநாயக மூர்த்தி முரளீதரன்(கருணா), ரிஷாத் பதியுதீன் மற்றும் ஜனாதிபதியுடன் சிரேஷ்ட ஆலோசகரான பஷில் ராஜபக்ஷ எம்.பி உள்ளிட்டோர் இந்த சந்திப்பில் பங்குகொண்டிருந்தனர்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சி(ஈ.பி.டி.பி) ஆகியன உள்ளிட்ட அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சிறுபான்மைக் கட்சியைச் சேர்ந்தவர்களும் கலந்து கொண்டனர்.

நாடாளுமன்ற எதிரணியில் இருந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஜனநாயக மக்கள் முன்னணி ஆகிய இரு கட்சிகளைச் சேர்ந்தவர்கள் மட்டுமே கலந்துகொண்டனர்.

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்காத கட்சிகளான புளொட்,ஈ.பி.ஆர்.எல். எவ்.(பத்மநாபா அணி),தமிழர் விடுதலைக் கூட்டணி போன்றனவும் இந்த கலந்துரையாடலில் கலந்துகொண்டன.

கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) மட்டக்களப்பு மாநகரசபைத் தலைவர் சிவகீதா பிரபாகரன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பின் போது, பொதுவாகவே வன்னி நிலைவரம் பற்றியே பேசப்பட்டதாக அதில் கலந்துகொண்ட பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

வன்னி மக்களுக்கு போதுமான உணவு மற்றும் மருந்துப் பொருள்கள் அனுப்பப்படுவதாக புள்ளி விவரங்களை சுட்டிக்காட்டி அரசாங்க தரப்பில் இருந்து விளக்கமளிக்கப்பட்டுள்ளதுடன் விமர்சனங்களும் குற்றச்சாட்டுக்களும் இதன்போது முற்றாக மறுக்கப்பட்டுமுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை வடக்கில் நடத்துவதற்கு முன்னர் இடம்பெயர்ந்த மக்கள் வாக்களிப்பதற்கான உரிமையை உறுதிப்படுத்துமாறு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூக் ஹக்கீம் இதன்போது தெரிவித்திருந்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இந்தச் சந்திப்பில் கலந்துகொள்ள முடியாமைக்கான காரணத்தைக் கூறி அனுப்பிவைத்த கடிதம் குறித்து ஜனாதிபதி ராஜபக்ஷ இதன்போது விளக்கமொன்றை கொடுத்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக ஜனாதிபதியின் ஊடக இணைப்பாளரான விஜயானந்த ஹேரத் கருத்து வெளியிடுகையில் -

'வன்னியில் இருக்கும் மக்கள் அனைவருக்கும் தேவையான அளவு உணவு மற்றும் மருந்துப் பொருள்கள் அரசாங்கத்தால் அனுப்பி வைக்கப்பட்டிருப்பது உறுதிசெய்யப்பட்டது.

அரசியல் தீர்வு ஒன்றைக் காண சகல கட்சிகளையும் ஒன்றிணையுமாறு ஜனாதிபதி இதன்போது அழைப்பு விடுத்திருக்கிறார்.

அத்துடன், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் இந்தச் சந்திப்பில் கலந்துகொள்ளாமையானது தமிழ் மக்கள் மீது அவர்களுக்கு அக்கறை இல்லை என்பதையே எடுத்துக்காட்டுகிறது என்பதையும் சுட்டிக்காட்டினார்.

இதேநேரம் வன்னியில் இயன்றளவு விரைவில் உள்ளூராட்சித் தேர்தல் நடத்துவது பற்றியும் இதன்போது பேசப்பட்டது. யாழ்.குடாநாட்டுக்கு முன்னதாக வன்னியில் இந்த தேர்தல் நடக்கக்கூடும் -என்று கூறினார். (1)

## நாளை

| | |
|---|---|
| பங்குனி 16 | 29.03.2009 ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | திருதியை மு.இ. 06.56வரை |
| நட்சத்திரம்: | பரணி பி.இ.04.39 வரை |
| சுபநேரம்: | 09.13 - 010.43 |
| ராகுகாலம்: | 04.43 - 06.13 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் அதிபர் கு.ரவீந்திரன் அவர்களின்
அன்புச் சகோதரர்

## குண்டுமணி திரவியநாதன்

(83872)

அவர்கள் காலமான செய்தி கேட்டு துயர் அடைகின்றோம். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர்கள், மாணவர்கள்
யா/புத்தூர் ஸ்ரீபஞ்ஞசீக வித்தியாலயம், புத்தூர்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 28 . 09 . 1932



விண்ணில் 08 . 04 . 2008

## அமரர் தம்பு இராமலிங்கம் நடராஜா

(ஓய்வுபெற்ற முகாமையாளர்- இலங்கை வங்கி)

திதி: துதியை (28.03.2009)

அன்புள்ள அப்பா
உங்கள் முகம் காணாமல்
ஒருவருடம் ஆனதப்பா!
மீண்டும் வருவீர்கள் என்றிருந்தோமே
மீளாத்துயரில் கொண்டு போனீர்களே அப்பா!

வாசலிலே என்றும் காலோசை கேட்குதப்பா -அப்பா
கனவினிலே உங்கள் அன்புமொழி கேட்குதப்பா
துணையாய் இருந்தபோது துன்பம் மறந்தோம் அப்பா
இன்றோ உருவம் பார்க்காமல் துடித்தே மாய்கின்றோம் -அப்பா.

உடையார் லேன்,
அராலி தெற்கு, வட்டுக்கோட்டை. (83866)

என்றும் உங்கள் பிரிவால் துடிக்கும்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## திரு. அண்ணாமலை வரதராஜா
### (அப்பு) நில அளவையாளர் (Surveyor)

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வாழ்விடமாகவும் கனடிய மண்ணில் புலம் பெயர்ந்து வாழ்ந்து வந்தவருமான அண்ணாமலை வரதராஜா (OMAN RAJA) கடந்த 22.03.09 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சிவகாமி தம்பதிகளின் அன்புப் பேரனும் காலஞ் சென்றவர்களான அண்ணாமலை - இராசம்மா தம்பதிகளின் இளைய புதல்வனும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம்-ருக்குமணி தம்பதிகளின் அன்பு மருமகனும் மீனலோஜினியின் ஆருயிர்க் கணவரும் துஷ்யந்தன் (கண்ணன்-UK), தவபாலன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஷாமினி (UK), கமலினி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் பூஜா (UK), தர்ணி, நிலா (கனடா) ஆகியோரின் பாசமிகு பேரனும் முருகையா (இலங்கை), குணதேவி (நோர்வே), அம்பிகாதேவி, விமலாதேவி, சறோஜினி தேவி (கனடா) ஆகியோரின் அன்புமிகு சகோதரனும் சிவபாக்கியம், காலஞ்சென்ற தம்பிராஜா, காலஞ்சென்ற வாமதேவா, சிவயோகநாதன் கந்தசாமி (கனடா), காலஞ்சென்ற வனஜலோஜினி காலஞ்சென்ற பாலகுமார் ஆகியோரின் மைத்துனரு மாவார்.

அன்னாரின் பூதவுடல் SHEPPERD AND MIDLAND இல் அமைந்துள்ள OGDEN FUNERAL HOME இல் 28 March சனிக்கிழமையும் 29 March 2009 ஞாயிற்றுக்கிழமையும் மாலை 5 மணிமுதல் இரவு 9 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மறுநாள் திங்கட்கிழமை முற்பகல்10 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை இலக்கம் 1591 ELGIN MILL - LESLIE இல் அமைந்துள்ள ELGINMILL CREMATORIUM இல் இறுதிக்கிரியைகள் நடைபெற்று தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்: மனைவி, பிள்ளைகள்

தொடர்புகளுக்கு:
மனைவி - மீனா 9054756145 (கனடா),
மகன் - கண்ணன் 0044 208 6432733 (UK),
மகன் - தவபாலன் 416 725 4414 (கனடா).

# விற்பனையில்...

செல்வி உ.உமாமகேஸ்வரி
எழுதிய பரத நாட்டியக் கச்சேரி முறைமை
O/L, A/L மற்றும் பரதநாட்டியத்தை உயர் கல்வியில் பயிலும் மாணவர்களுக்கும், கலையார்வலர்களுக்கும் ஏற்றது.

பெறும் இடங்கள்:
பூபாலசிங்கம் புத்தகசாலை
ஸ்ரீலங்கா புத்தகசாலை
ஸ்ரீ சுப்பிரமணியம் புத்தகசாலை
அன்னை புத்தகசாலை
ஸ்ரீ சுரன் புத்தகசாலை (சுன்னாகம்)
துர்க்கா புத்தகசாலை (சுன்னாகம்)
பைன் செலெஷ்ஷன் (சுன்னாகம்)
நாயக பாலன் ஸ்ரோர்ஸ் (மானிப்பாய்)

மேலதிக பிரதிகளுக்கு- மருதா என்டர்பிரைஸஸ்
இல: 452, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
0771275367.

# இரத்ததான முகாம்

ஆனைக்கோட்டை,மார்ச்28

மானிப்பாய் லயன்ஸ் கழகத்தினரால் ஒழுங்குசெய்யப்பட்ட இரத்ததான முகாம் நாளை ஞாயிற்றுக்கிழமை மல்லாகம் புனித சதாசகாய மாதா ஆலய வளவில் நடைபெறவிருக்கின்றது.

இந்த முகாமில் மல்லாகம் புனித சதாசகாய மாதா ஆலய இளைஞர் மன்றத்தினர் கலந்துகொண்டு இரத்ததானம் வழங்கவிருக்கின்றனர்.

இந்த இரத்ததான முகாமில் கலந்துகொண்டு இரத்ததானம் செய்ய விரும்புபவர்கள் அன்று காலை சமுகமளிக்குமாறு லயன்ஸ் கழகத்தினர் அறிவித்துள்ளனர். (50-20)

# தீவகத்தில் பற்சிகிச்சை முகாம்

யாழ்ப்பாணம்,மார்ச்28

'போரூட்' நிறுவனத்தின் அனுசரணையுடன் தீவகத்தில் பற்சிகிச்சை முகாம் நடைபெறுகின்றது. மாணவர்கள் மற்றும் பெரியவர்களுக்கான இந்தப் பற்சிகிச்சை முகாம்கள்வேலணை, புங்குடுதீவு பிரதேசத்தில் நடைபெற்றுள்ளன. கடந்த 16ஆம் திகதி வேலணையில் நடைபெற்ற முகாமில் 209 பேரும், 23 ஆம் திகதி புங்குடுதீவில் நடைபெற்ற முகாமில் 381 பேரும் பங்குபற்றி பயனடைந்துள் ளனர்.

மேலும் நாளை மறுதினம் திங்கட்கிழமை நயினாதீவிலும், 6ஆம் திகதி திங்கட்கிழமை நெடுந்தீவிலும் பற்சிகிச்சை முகாம்கள் நடைபெறும் எனவும் வேலணைப் பிரதேச வைத்திய நிலையப் பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி ஆ.திருநாவுக்கரசு தெரிவித்தார். (50-267)

## சனசமூக நிலையப் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 28

நுணாவில் கிழக்கு சர்வசாதன சங்க சனசமூக நிலையத்தின் பொதுக்கூட்டம் அண்மையில் சங்க மண்டபத்தில் க.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

நிலையத்தின் தலைவராக க.மோகனராஜலிங்கமும், உப தலைவராக ந.சுந்தரலிங்கமும், செயலாளராக வி.சதாசிவமும், இணைச் செயலாளராக க.சஞ்சயனும், பொருளாளராக க.சிவபாதசுந்தரமும் இவர்களுடன் மேலும் ஆறு உறுப்பினர்களும் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். (50-267)



# இணுவையம்பதி சிவகாமி அம்மன் கோயில்
## சர்வதாரி வருஷ மஹோற்சவ விஞ்ஞாபனம் -2009

அம்பிகை அடியார்களே!

நிகழும் மங்களகரமான சர்வதாரி வருடம் பங்குனி மாதம் 15ஆம் திகதி (28.03.2009) சனிக்கிழமை முற்பகல் 10.45 மணி முதல் 11 மணி வரையுள்ள சுப முகூர்த்தத்தில் அம்பிகைக்கு துவஜாரோகணம் (கொடியேற்றம்) நிகழ அம்பிகையின் திருவருள் கைகூடியுள்ளது. அன்று முதல் பன்னிரண்டு தினங்கள் மஹோற்சவம் நடைபெறும். அடியார்கள் பன்னிரண்டு தினங்களும் ஆசாரசீலர்களாய் ஆலயத்திற்கு வருகைதந்து அம்பிகையின் திருவருளைப் பெற்றுய்வீர்களாக.

27.03.2009- வெள்ளிக்கிழமை- பந்தற்கால் -மு.ப.10 மணி
28.03.2009- சனிக்கிழமை- கொடியேற்றம் -மு.ப.10.45 மணி
02.04.2009- வியாழக்கிழமை- மஞ்சம்- மாலை 7 மணி
04.04.2009- சனிக்கிழமை- கைலாசவாகனம் மாலை 7 மணி
05.04.2009- ஞாயிற்றுக்கிழமை- குதிரைவாகனம்- மாலை 7 மணி
06.04.2009- திங்கட்கிழமை- சப்பறம்- மாலை 7மணி
07.04.2009 - செவ்வாய்க்கிழமை- தேர் (காலை 9மணி)- வசந்த மண்டபப் பூஜை காலை 7 மணி
08.04.2009- புதன்கிழமை- தீர்த்தம் (காலை 9மணி)- வசந்த மண்டபப் பூஜை காலை 8 மணி
09.04.2009- வியாழக்கிழமை- பூங்காவனம்- மாலை 6.30 மணி
10.04.2009- வெள்ளிக்கிழமை- பிராயச்சித்தம்- காலை 6 மணி
10.04.2009- வெள்ளிக்கிழமை- வைரவர் பொங்கல்- மாலை 4 மணி

காலை 7 மணி காலைப் பூஜையுடன் ஆரம்பமாகி நண்பகல் 12 மணிக்கு காலைத் திருவிழா நிறைவு.
மாலை 5 மணிக்கு சாயரட்சைப் பூஜையுடன் ஆரம்பமாகி 8.30 மணிக்கு மாலைத் திருவிழா நிறைவு.

(சி/557670) மு.சிவலிங்கம் (ஆதீனகர்த்தா).

# சைவவித்தியா விருத்திச் சங்கம்

பதவி வெற்றிடம் - உபவிடுதிக்காப்பாளர் - பெண்

தகைமைகள்:
* க.பொ.த. சாதாரண தரத்திற்குக் குறையாத கல்வித்தகைமை
* வயதெல்லை: 30- 60
* விடுதியில் தங்கியிருப்பது கட்டாயம். உணவும் தங்குமிட வசதியும் இலவசம்.
* விண்ணப்பதாரர் தேகாரோக்கியம் உடையவராகவும், இல்லப் பிள்ளைகளைப் பரிவோடு கவனிப்பதிலும், சைவாசாரம் பேணுவதிலும், வழிகாட்டுவதிலும் அர்ப்பணிப்போடு ஈடுபடுவராகவும் இருத்தல் வேண்டும்.

ஊதியத் திட்டம்: ரூபா 5500/= - 6x160/= & 6x180/= - ரூ 7540/=

அண்மையில் பெறப்பட்ட இரு நற்சான்றிதழ் பிரதிகளோடு விண்ணப்பங்கள் கிடைக்கவேண்டிய இறுதிநாள்: **11.04.2009.**

சைவவித்தியா விருத்திச் சங்கம்,
கலாசாலை வீதி, திருநெல்வேலி. (சி/557674) செயலாளர்.


# ஒருவாரகால முழுநேர கற்கைநெறி...

*உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களை பெற, சுயதொழில் ஆரம்பிப்பதற்கு மற்றும் தரம்வாய்ந்த சான்றிதழைப்பெற*

## Diploma in Video Editing

Cool 3D Studio · Adobe Premiere · Adobe Photoshop · VCD Cutter · Capturing · Pinnacle Studio

## Diploma in Computerized Accounting

Quick Books ACCPAC MYOB

*Course Module*
Fundamentals of IT · Manual Accounting · Financial Accounting · Cost Accounting · Taxation (Including VAT) · Stork Control · Bank Reconciliation · Budgeting · Fore Casting · Business Planing

**COMPUTER EXPRESS**
Institute of Information Technology
#167, Kasthuriyar Road, Jaffna.
Phone - 021 222 8250/ 0777222422

வகுப்புக்கள் ஆரம்பம்: 30/03/2009 - 09AM


# மரண அறிவித்தல்

## கணபதிப்பிள்ளை காங்கேஸ்
(Officer spinning and weaving mill wellawatte)



18/8, கொண்டலடி லேன், நல்லூர், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவில் வசித்தவருமாகிய கணபதிப்பிள்ளை காங்கேஸ் 23.03.2009 திங்கட்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை- சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சண்முகம்- அம்மாகுட்டி தம்பதியரின் அன்பு மருமகனும் மங்கையர்க்கரசியின் பாசமிகு கணவரும் சுரேஸ் (Accountant லண்டன்), சுகந்தி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் திருநாவுக்கரசின் (Rtd.Teacher) அன்புச் சகோதரரும் அன்ரன் கீதராஜ் (Engineer-கனடா), அஜித்தா (L.L.B.லண்டன்) ஆகியோரின் மாமனும் லெட்சுமி சுப்பிரமணியம் காலஞ்சென்றவர்களான செல்லம்மா, நடராசா, சின்னம்மா, பொன்னுத்துரை, தம்பையா, சின்னத்துரை மற்றும் பொன்னுத்துரை (எஸ். பொ.அவுஸ்திரேலியா), இராசமணி இராமேஸ்வரன் (கனடா), சரவணமுத்து (Rtd.Teacher), பரமேஸ்வரி, திருநாவுக்கரசு, இராஜேஸ்வரி கனகசபை (லைபிரியா), சரச்சந்திரன் (கனடா), சொல்வேந்தன் ஆகியோரின் மைத்துனரும் யாகுலன், இந்துஜா, கதாரணி, யாதவன் (கனடா), கௌசிகா, கௌதமன் (லண்டன்) ஆகியோ ரின் பாசமுள்ள பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.03.2009) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*18/8, கொண்டலடி லேன்,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*
*தொ.பே.: 222 9064*

(83864)

*தகவல்:*
கணபதிப்பிள்ளை திருநாவுக்கரசு
(இளைப்பாறிய ஆசிரியர்- சகோதரன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகம் யாழ்.நகர் மைய றோட்டறக்ட் கழகமும் இணைந்து உரும்பிராய் 'கிட்ஸ் பார்க்' முன்பள்ளிச் சிறுவர்களிடையே விளையாட்டுப் போட்டியொன்றை நடத்தின.

இதில் சிறுவர்கள் போட்டியில் ஈடுபட்டுள்ளதை முதலாவது படத்தில் காணலாம். சிறுவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் அமர்ந்திருப்பதை இரண்டாவது படத்திலும், போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஓய்வுபெற்ற அதிபர் றோட்டேரியன் அ.பஞ்சலிங்கம் உரையாற்றுவதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

# பயங்கரவாதத்தை ஒழிக்க யுத்தம் புரிந்ததால் பொருளாதாரம் மேலும் வீழ்ச்சியடைவது தடுக்கப்பட்டது

## இப்படிக் கூறுகிறார் கெஹெலிய

கொழும்பு, மார்ச் 28

யுத்தத்தினால் பொருளாதாரம் கீழ் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது எனக் கூறுவதை ஏற்க முடியாது. பொருளாதார நிலைகளைத் தாக்கும் புலிகளின் திட்டத்தை பயங்கரவாதத்தை ஒழித்ததன் மூலம் தவிடுபொடியாக்கிவிட்டோம். பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டிருக்காவிட்டால் பொருளாதாரம் மிக மோசமான நிலைக்குச் சென்றிருக்கும்.

இப்படிக் கூறுகிறார் பாதுகாப்பு விவகாரங்களுக்கான பேச்சாளரும் அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல.

தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

யுத்தப் பிரதேசத்தில் சிக்குண்டுள்ள மக்களைப் பற்றி சர்வதேச சமூகம் பல அழுத்தங்களைக் கொடுத்து வருகிறது. அம்மக்களைப் பாதுகாக்கவும் மீட்கவும், அரசுக்கு ஒத்துழைப்பை வழங்குமாறு நாம் சர்வதேசத்தைக் கேட்டுக் கொள்கிறோம்.

பாதுகாப்பு நடவடிக்கை போன்று இன்று எல்லோராலும் பரவலாகப் பேசப்படுவது பொருளாதார நெருக்கடி. இது அரசியல்வாதிகளின் முக்கிய விடயமாக மாறியுள்ளது. ஓர் அரசு என்ற வகையில் மக்களைப் பயங்கரவாதத்திலிருந்து மீட்பது எமது கடமை.

கடந்த இரண்டரை வருட காலமாக யுத்தத்திற்காக 350 பில்லியன் தொடக்கம் 600 பில்லியன் வரை செலவிடப்பட்டுள்ளது. இதனை முப்பது வருட காலத்துக்குக் கணக்கிட்டால் அது பாரிய தொகையை எட்டி நிற்கும். ஆனால் ஒன்றை மட்டும் நான் கூற விரும்புகிறேன். இன்று விடுதலைப் புலிகளின் பயங்கரவாத செயல் மட்டுப்படுத்தப்பட்டு விட்டது. அரசு அவ்வாறு யுத்தத்திற்காக பாரிய தொகையை செலவழிக்காதிருந்தால் நாட்டின் பொருளாதாரம் இதைவிட மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கும்.

காரணம் புலிகள் பொருளாதார நிலைகள் மீதே தாக்குதல் நடத்தியிருப்பார்கள். அவ்வாறு நடத்தியிருந்தால் பொருளாதாரத்தின் நிலை கேள்விக்குறியாகி யிருக்கும்.

பயங்கரவாதத்தை ஒழிக்க மக்கள் வழங்கிய ஆதரவினால்தான் நாட்டின் பயங்கரவாதச் செயல் மட்டுப்படுத்தப்பட்டது. எனவே யுத்தத்தினால் பொருளாதாரம் கீழ் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது எனக் கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

இலங்கையில் மட்டுமல்ல, உலகம் முழுவதும் எதிநோக்கும் பிரச்சினை இது. இதனால் அமெரிக்கா பாரிய நெருக்கடியைக் கடந்த மாதம் சந்தித்தது. இவ்வாறான யுத்தத்தை நடத்திக்கொண்டு நாட்டின் பொருளாதாரம் பாதிப்புறாத வகையில் அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இது பொருளாதாரம் மற்றும் பயங்கரவாதத்தை ஒழித்தல் போன்றவற்றுக்குக் கிடைத்த வெற்றி ஆகும். அண்மையில் போலி ஊடக அட்டையை வைத்திருந்த ஊடகவியலாளர் ஒருவர் சோதனைகளின் போது பிடிபட்டார். எனவே அனைவரும் தங்களது ஊடக அட்டையுடன் கட்டாயமாக தேசிய அடையாள அட்டையையும் கைசவம் வைத்திருக்க வேண்டும்- என்றார். (1)

# வேகத்தடை நீக்கப்பட்ட பகுதிகள் சீரமைப்பு

வண்ணை, மார்ச் 28

யாழ்.பிரதான வீதி மற்றும் காங்கேசன் துறை வீதி, கஸ்தூரியார் வீதி போன்ற வேறும் சில வீதிகள் தார் 'கொங்கிறீற்' கலவை கொண்டு சீரமைக்கப்பட்டு வருகிறது.

இதேவேளை சமீபத்தில் படையினர் வீதிக்குக் குறுக்காகப் போடப்பட்டிருந்த வேகத்தடைகள் நீக்கப்பட்டதால் குறிப்பிட்ட இடங்களில் காணப்பட்ட குன்றும் குழிகளும் தார் 'கொங்கிறீற்' கலவைகளால் சீரமைக்கப்பட்டுள்ளன.

அதேவேளை மேற்படி வீதிகள் பெரிதாக இருக்கும் குன்றும் குழிகளும் நிரப்பப்படாமல் இருந்தவாறே உள்ளன. அந்தக் குன்றுகளில் மழைநீர் தேங்கி நின்று போக்குவரத்தில் வாகனங்கள் செல்கையில் சகதிகளை மக்கள் மீது வாரி அடிக்க நேர்கிறது.

எவ்வாறாயினும் மேற்படி குன்றும் குழிகளாலும் வாகனங்களுக்கும் சேதங்கள் ஏற்படுவதுடன் வீதி விபத்து ஆபத்துக்களையும் உண்டாக்கி வருவதும் குறிப்பிடத்தக்கது. (1-160)

# மாட்டுக்கொம்பு குத்தி சிறுவனுக்குக் காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 28

மாட்டுக் கன்றுடன் விளையாடிய நான்கு வயதுச் சிறுவனை மாடு கொம்பினால் குத்தி காயப்படுத்தியது.

இச்சம்பவம் தாவளை- இயற்றாலையில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த எஸ்.சிபிராஜ் (வயது 4) என்னும் சிறுவன் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (203-207)

# புதுமாத்தளன் பகுதி மீது செறிவான ஷெல் தாக்குதல் சிறுவர்கள் உட்பட 25 பேர் உயிரிழப்பு; 120 பேர் காயம்!

## டாக்டர் வரதராஜா பி.பி.ஸிக்குத் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 28

முல்லைத்தீவு புதுமாத்தளன் பகுதியில் உள்ள பாதுகாப்பு வலயம் மீது நேற்று முன்தினம் அதிகாலை முதல் மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான ஷெல் தாக்குதல்களில் சிறுவர்கள், நோயாளர்கள் உட்பட 25 பேர் உயிரிழந்தனர். மேலும் 120 பேருக்கு மேற்பட்டோர் காயமடைந்தனர் - என முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் வரதராஜா நேற்று முன்தினம் இரவு பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்.

மேலும் அவர் பி.பி.ஸிக்குத் தெரிவித்தவை வருமாறு:-

புதுமாத்தளன் வைத்தியசாலை மீது நேற்று முன்தினம் அதிகாலை 3 மணியளவில் மேற் கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலில் சத்திரசிகிச்சைப் பிரிவில் சிகிச்சையளிக்கப்பட்டு வந்த ஐந்து நோயாளர்கள் உயிரிழந்தனர். வைத்தியசாலை ஊழியர்கள் இருவர் உட்பட 10 பேர் காயமடைந்தனர்.

வைத்தியசாலைமீது மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலினால் சத்திரசிகிச்சைப் பிரிவு, அவசர சிகிச்சைப்பிரிவு ஆகியன சேதமடைந்தன. அத்துடன் அங்கு வைக்கப்பட்டிருந்த வைத்திய உபகரணங்கள் மற்றும் மருந்துப் பொருட்கள் ஆகியன சேதமடைந்தன.

அதேவேளை, நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் மக்கள் பாதுகாப்பு வலயம் மீது மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலில் 140 பேர் காயமடைந்த நிலையில் புதுமாத்தளன் வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டனர். அவர்களில் 20 பேர் சிகிச்சை பலனளிக்காமல் உயிரிழந்தனர்.

எனினும், சம்பவ இடத்தில் உயிரிழந்தவர்களின் சடலங்கள் வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்படவில்லை.

வைத்தியசாலை தாக்கப்பட்டது தொடர்பாக மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஞானசோதிக்கும் மற்றும் வடக்கு கிழக்கு இணைப்பாளர் டாக்டர் ஜெகநாதனுக்கும் தகவல் தெரிவித்துள்ளோம்.

அதேவேளை எமது பிராந்திய அரச அதிபருக்கு இச்சம்பவம் தொடர்பாக கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளோம். வைத்தியசாலை பாதுகாப்பை உறுதிப்படுத்தித் தருமாறு அந்தக் கடிதத்தில் கேட்டுள்ளோம்.

எமது வைத்தியசாலையிலிருந்து காயமடைந்த 485 பேரை நேற்று முன்தினம் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல்மூலம் புல்மோட்டைக்கு அனுப்பி வைத்துள்ளோம்.

அதில் வந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் அதிகாரி ஒருவர் தாக்குதலுக்கு இலக்கான வைத்தியசாலையைப் பார்வையிட்டார்-என்றார். (அ-சி)

# தவக்காலச் சிந்தனை

## எமது வாழ்வு செழிப்பானதா?

இன்றைய உலகம் உறவுகள் அருகிய, சுயநலம் நிறைந்த, தன்னாதிக்கம் ஓங்கிய, அயலவர்கள் பற்றிய உண்மையான அக்கறை அற்ற ஒன்றாக இருக்கின்றது. கலப்படமற்ற பொதுநலம் விரும்பியோர் ஒரு சிலரே.

இந்நிலைக்கு அடிமட்டக் காரணம் எம் எல்லோருக்கும் மறுக்க முடியாத ஊற்றாகிய இறைவன் மட்டிலும் பெரும்பாலான மனிதரிலும் மேலோங்கி நிற்கும் அலட்சியப் போக்கே. எவரும் தன் நேரடி ஊற்றாகிய பெற்றோரை மதிக்காவிடின், தன் ஏனைய உறவுகளையும் மதிக்கவே மாட்டார். எம் பெற்றோரையே எமக்கு ஏற்படுத்தித் தந்தவரும் இறைவனே.

''மீனினத்தின் வாழ்வுக்கு நீர் எவ்வளவு அவசியமோ, அதே போல் தான் எம்முடைய மெய்யான வாழ்வுக்கும் இறைச்சூழல் இன்றியமையாததாகும். அதனில் வாழ்பவர்கள் ஒரு செழிப்பான ஆற்றங்கரையில் நடப்பட்டு வளரும் மரங்களுக்கு ஒப்பாவார்'' என வேதாகமம் கூறுகின்றது. (எசேக்கியேல் 47:10) இக் கூற்று எல்லா மதத்தவருக்குமே பொருத்தமானதாகும்.

எனவே நாமும் நம் ஊற்றாகிய இறைவனை நினைவிலிருத்தி, அவர் விருப்பப்படி வாழ்ந்து, எம்மையும் எமது சூழலையும் செழிப்பானதாக்கி, எவ்வித சோதனைகள், வேதனைகள் வந்தாலும் அவற்றைத் தாங்கி நிற்கக் கூடியவர்களாகவும் கனிகள் பல கொடுப்போராகவும் வாழ்வோமாக.

அ.சத்[illegible]பிள்ளை,
மாதகல்.

# ஊர்காவலர், மூன்று விவசாயிகள் வெலிகந்தையில் சுட்டுக்கொலை!

## மேலும் நால்வர் காயம்; புதன் இரவு அனர்த்தம்

கொழும்பு, மார்ச் 28

பொலநறுவை, வெலிகந்தைப் பிரதேசத்தில் புதன்கிழமை இரவு 10.50 மணியளவில் இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஊர்காவற்படையைச்சேர்ந்த ஒருவரும் மூன்று விவசாயிகளும் உயிரிழந்தனர். மேலும் நால்வர் படுகாயமடைந்தனர்.

காயமடைந்த நால்வரும் வெலிகந்தை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக பொலநறுவை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர் என்று வெலிகந்தைப் பொலிஸார் தெரிவித் தனர்.

[illegible] வேலை செய்து [illegible] அங்கு வந்த ஆயுததாரிகள் தங்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்று காயமடைந்தவர்கள் தெரிவித்தனர் என வெலிகந்தைப் பொலிஸார் மேலும் கூறினர்.

ஊர்காவற்படையைச் சேர்ந்தவரான எம்.சோமதாஸா (வயது - 44), விவசாயிகளான எம்.சுகத் சந்திரசிறி (வயது - 27), கே.ஏ. சரத்குமார (வயது - 37) மற்றும் கே. தர்மசேன(வயது - 42) ஆகியோரே உயிரிழந்தனர்.

நிலாந்த சமரவீர(வயது - 24), இந்திகா விக்கிரமசிங்க (வயது - 24), நிஷாந்த விஜேசிங்க (வயது - 27) மற்றும் நிலாந்த வீரகுமார (வயது - 16) ஆகியோரே காயமடைந்தவர்களாவர். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொலிகண்டி இ.த.க வில் புதிய கட்டடத் திறப்பு விழா

கரவெட்டி, மார்ச் 28

பொலிகண்டி இ.த.க.பாடசாலையின் புதிய கட்டடத் திறப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை அதிபர் வே.துரைசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் க.கணேஷ் கலந்து கொள்வார்.

கௌரவ விருந்தினராக 'நிகொட்' பிரதித்திட்டமிடல் பணிப்பாளர் என்.எஸ்.ஆர்.சிவரூபனும், சிறப்பு விருந்தினராக மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா, பருத்தித்துறை பிரதேச செயலர் இரா.வரதீஸ்வரன் ஆகியோரும் கலந்து கொள்வார்கள். (50-70)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்




### அமரர் பேரம்பலம் ஜெயானந்தன்

மறைந்து விட்ட சூரியனே!
மறுபடியும் உதிக்காயோ!
உதிர்ந்து விட்ட மலர்ச் சரமே!
உயிர் பெற்று வருவாயோ
மறந்திடுமோ உன் வதனம்
உனை மறந்திடுமோ எம் இதயம்
நீண்ட நாள்களாக உன் முகம் காணவில்லை
காணுவோம் என்ற நம்பிக்கையில் நாமிருந்தோம்
எமது நம்பிக்கை பொய்யாகி விட்டதே
அன்புச் செல்வத்தின் ஆத்மா சாந்திபெற
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கடந்த 26.02.2009 வியாழக்கிழமை கனடா ரொறன்ரோவில் சிவபதமடைந்த எமது அன்புச் செல்வத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (28.03.2009) சனிக்கிழமை மு.ப.11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

என்றும் நினைவுடன்;
சகோதரர்கள், மைத்துனர்கள்.
சைவப்பாடசாலை வீதி, கொண்டாவில் மேற்கு.


# புலிகளுக்கு உதவுகிறதாம் நோர்வே கூறுகிறார் விமல் வீரவன்ஸ எம்.பி

விடுதலைப் புலிகளின் முக்கிய நபரான குமார் பத்மநாதன் (கே.பி) என்பவர் ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதியான ஜோன் கோம்ஸைச் சந்திக்க நோர்வே வெளிநாட்டுக்கு அமைச்சின் அனுசரணையில் ஏற்பாடு செய்யப்பட்டதாகக் குற்றஞ்சாட்டியிருக்கும் தேசிய சுதந்திர முன்னணி, இது குறித்து தனது கண்டனத்தையும் வெளியிட்டிருக்கிறது..

''கே.பி. என்பவர் உலகில் பல்வேறு குற்றத்திற்காகத் தேடப்படும் ஒருவர். இவர் 25 கடவுச் சீட்டுக்களைப் பாவித்து பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபடுபவர். இவர் விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களைக் கொள்வனவு செய்து கப்பல் மூலம் வழங்கும் ஒரு புலி உறுப்பினர்'' என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

பத்தரமுல்லையிலுள்ள தேசிய சுதந்திர முன்னணியின் கட்சி அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக மாநாட்டிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ மேற்கண்டவாறு தெரிவித்தார். இம்மாநாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம். முஸம்மில், ஜயந்த சமரவீர ஆகியோரும் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து அவர் அங்கு கருத்துத் தெரிவிக்கையில்,

விடுதலைப் புலிகளுக்கு சர்வதேச மட்டத்தில் செல்வாக்குப் பெற்றுக்கொடுப்பதையும் சர்வதேசம் உதவுவதையும் நோர்வே உடனடியாக நிறுத்திக் கொள்ளவேண்டும். நோர்வேயின் இச்செயலை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

அப்பாவித் தமிழ் மக்களைக் கொலைசெய்யும் விடுதலைப் புலிகளிடம் யுத்தத்தை நிறுத்தும்படியும் ஆயுதங்களைக் கீழே வைத்து இராணுவத்திடம் சரணடையும்படியும் இரா. சம்பந்தன் விடுதலைப் புலிகளிடம் கோரிக்கை விடுத்தல் வேண்டும். புலிகளின் பிடியில் இருக்கும் தமது தமிழ் மக்களைப் பாதுகாக்க அவர் முன்வருதல் வேண்டும்.

கருணா-பிள்ளையான் இருவருக்கிடையே ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை சுமுகமாகத் தீர்த்துக் கொள்ளுமாறு அரசும் நாமும் தெரிவித்துள்ளோம். அண்மைய திருகோணமலை, கந்தளாய் தாக்குதல் பற்றியும் உரிய பாதுகாப்பு மற்றும் திருமலை சிறுமி கொலை சம்பந்தப்பட்டவர்களுக்கு உரிய சட்ட நடவடிக்கை எடுக்கும்படியும் நாம் தெரிவித்துள்ளோம் - என்றார்.

## ஜே.வி.பியின் தேர்தல் அலுவலகங்கள் மீது தாக்குதல்

கொழும்பு, மார்ச் 28

மஹாரகம மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் அமைக்கப்பட்டுள்ள ஜே.வி.பியின் 6 தேர்தல் அலுவலகங்கள் மீது இனந்தெரியாதோரினால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

மஹாரகம, கொட்டாவை, பொல்வத்த சந்தி, அரவ்வல, பன்னிப்பிட்டிய மற்றும் தோலேகனத்த ஆகிய பிரதேசங்களில் அமைக்கப்பட்டிருந்த ஜே.வி.பியின் அலுவலகங்கள் மீதே இந்தத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதல் மேற்கொள்ள வந்த இனந் தெரியாதோர் கட்சி அலுவலகங்களைத் தாக்கியுள்ளதுடன், அங்கிருந்த சொத்துக்களுக்கும் சேதம் விளைவித்துள்ளனர் எனக் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த தாக்குதல் சம்பவங்கள் தொடர்பாக கட்சி உறுப்பினர்கள் மஹாரகம, பிலியந்தலை ஆகிய பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகளை செய்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (அ-சி)


## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 02 . 06 . 1953



உதிர்வு 10 . 04 . 2005

### அமரர் சங்கரப்பிள்ளை வரதராசா
(வள்ளல் வரதன்)

திதி: துதியை

நான்காண்டுகள் வந்ததப்பா!
கண்களோ கரைகிறதப்பா!
அப்பா என்றழைக்க- இனி
யாருமில்லையப்பா

பலகோடி இன்பங்கள் இருந்தென்ன
பல உறவுகள் இருந்தென்ன
எங்கள் அப்பாவுக்கு நிகர்
எங்கள் அப்பாவே தான்

உங்களது உடலை உருக்கி
அயராது உழைத்து எங்களை
ஆளாக்கிய எம் அப்பாவை
என்றும் நாம் மறவோம்.

குடும்பத்தினர்.
''சந்நிதி இல்லம்'',
கைதடி கிழக்கு,
கைதடி.

(83808)



## 2 ஆம் ஆண்டு நினைவில்...



### திருமதி லியோனா யூலியஸ்ராணி பசில் ராஜ்குமார்

(ஆசிரியை, யா/புற்றளை மகா வித்தியாலயம் - புலோலி
யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி - நெல்லியடி)

நினைத்தது எத்தனையோ
நிறைவேறியதும் எத்தனையோ
ஆனால் நாம் சற்றும் எதிர்பார்க்கவில்லை
உங்கள் கனவுகள், கடைசிவார்த்தை
நிச்சயம் நிறைவேறும்
குட்டி எனது தோள்முட்ட வந்துவிட்டான்
நீங்கள் எங்களுடன்தான் வாழ்கின்றீர்கள்
உங்களைப் பிரிந்தால்தானே மறப்பதற்கு...

பி.பசில் ராஜ்குமார் (கணவர்), ப.பசில் பியன்ரோ (மகன்),
அம்மா, அண்ணா ஜோசப்கொன்விக் [illegible]
மற்றும் உறவினர்கள்.

off சேன்.தோமஸ் லேன்,
பருத்தித்துறை.
[83722]



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
### இளையதம்பி கந்தையா



திருமதி
### கந்தையா பாலாம்பிகை

15.02.1920 → மலர்வு → 07.11.1930
24.02.2009 → உதிர்வு → 19.02.2009

எம் குடும்பத்தெய்வங்களின் பிரிவுச் செய்தி கேட்டு நேரில் கலந்து கொண்டும், தொலைபேசி வாயிலாகவும் எம் துயரத்தைப் பகிர்ந்து கொண்ட அன்புள்ளங்களுக்கும் உறவினர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன், இன்று (28.03.2009) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்தில் கலந்துகொண்டு அன்புத் தெய்வங்களின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தித்து தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இவர்கள் பிரிவால் என்றும் வாடும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

வாரியப்புலம்,
[illegible]ம்.
(83847)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்றலும் சுவடுகளும்

ந.சத்தியபாலன்



பழங்காலத்துப் பெரிய வீடு அது. தலைவாசலில் தொடங்கி அடுப்படியோடு சேர்ந்து போகும் நடைபாதை வரை நகர்ந்து செல்லவே கணிசமான நிமிஷங்கள் எடுக்கும்.

ஏழெட்டு அறைகள். இடையில் ஓரிரு மண்டபங்கள். நீள அகலங்களில் எதுவித குறையுமில்லாத தாராளமான அமைப்பு.

கட்டடம் முடிவடையும் இடத்தில் தொடங்கி தாராளமாக நீளும் ஒரு கிடுகு மேய்ச்சல் கொண்ட 'மால்'. அங்கேதான் அந்த வீட்டின் பெண்கள் காரியமாய் இருக்கிறார்கள். பெரியதொரு உரலில் மாவிடித்துக் கொண்டிருக்கிறார்கள். இரண்டு வயதான பெண்கள் - அருகிலே ஒரு பெண் இடித்து இறக்கும் மாவை அரித்துக்கொண்டிருக்கிறாள்.

லயம் தப்பாமல் மாறிமாறி உலக்கை போடும் ஒலியும் உலக்கை இறங்கும் ஒலியோடு சேர்ந்தியங்கும் அந்தப் பெண்களின் மூச்சொலியும் தெளிவாய்க் கேட்ட வண்ணம் இருக்கின்றன.

வீட்டின் உள்ளிருந்து மாலுக்குள் ஓடி வருகிறான் ஒரு சிறுவன்.

"எங்கட குஞ்சன் பள்ளிக்கூடத்தால வந்திட்டானோ...... வாடியெணை அப்பு..... தங்கச்சி பிள்ளைக்கு வச்சிருக்கிற ராசவள்ளிக் கிழங்கை எடுத்துக் குடடா.... நல்ல கணக்காய் ஆறியிருக்கும் இப்ப....."

பெத்தாச்சி வீட்டு ராசவள்ளிக் கிழங்குக் கஞ்சி........ நினைக்கவே வாயூறும் சங்கதியல்லவா அது-உள்ளே ஓடிப் போகிறான் சிறுவன், சித்தியிடம் கஞ்சி வாங்கிக் குடிக்க.

மாவிடிக்கும் வேலை ஓய்கையில் சித்தி ஒருதட்டில் தேங்காய்ப்பூவும் மறுகையில் சீனிப்போத்தலுமாக வருகிறாள். வீட்டில் அரிசிமா இடிக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சீனியும் தேங்காய்ப்பூவும் கலந்து அரிசிமாவோடு வறுப்பாள் பெத்தாச்சி. பின்னேரங்களில் தேத்தண்ணி குடிக்கும் போது சீனிமாவிலும் இரண்டொரு வாய்போட்டுத் தேத்தண்ணி குடிப்பது அந்த வீட்டு வழக்கமாகியிருந்தது. வீடுகளில் அரிசி இடிப்பதற்கும், மிளகாய்த்தூள் இடிப்பதற்கும் ஊரில் பெண்கள் இருந்தார்கள்.

அந்த வீட்டில் வழக்கமாக மாவிடிக்க வருவாள் 'மாவிடிக்கிற ஆச்சி' என்ற அடைமொழியில் அழைக்கப்படும் அமாவாசை ஆச்சி. பல்லெல்லாம் விழுந்துவிட்ட, மேற் சட்டை அணியாத குறுக்குக் கட்டோடு களைப்பே கொள்ளாமல் வேலை செய்யும் அமாவாசை ஆச்சியும், அன்னம்மாவும், பாறிக்கிழவியும் அந்த ஊரின் தொட்டாட்டு வேலைகளில் பங்கெடுக்கும் மூதாட்டிகள்.

கைக்குத்து அரிசிச்சோறும், வீட்டில் ஊறவைத்து உரலில் இடிக்கப்படும் அரிசிமாவில் அவிக்கும் இடியப்பமும், பிட்டும் இன்றும் நினைவை நிறைக்கின்றன.

வேலைகள் முடிந்த பிறகு மாலுக்குள் ஆறுதலாக அமர்ந்து வெற்றிலை போட்டபடி அம்மாவுடன் பேசிக்கொண்டிருந்து விட்டு மாலை மங்கிய பின்புதான் வீடு செல்வார்கள் அந்த ஆச்சிகள்.

இப்போதெல்லாம் கடைகளிலேயே 'பக்கற்றுகளில்' வறுத்த மா வருகிறது. இல்லையென்றால் வேலைக்குப் போகிறபோது ஊறுவைத்த அரிசியை மில்லில் கொடுத்து விட்டுப்போனால் அவர்கள் திரித்துத் தருவார்கள். கூப்பன் மா ஒத்துவராத -இப்போதும் உயிரோடு இருக்கிற -எண்பது வயது தொட்ட பாட்டி, பாட்டாக்களுக்காகத்தான் மில்லுக்கும் போகவேண்டியிருக்கிறது.

மில்லில் திரித்த அரிசி மாவில் பிட்டோ, இடியப்பமோ பசுந்தாக இல்லை என்று புறுபுறுத்தபடியே அவர்கள் சாப்பிடுகிறார்கள். அப்படியான பிரஜைகள் யாருமே இல்லாத வீடுகளில் கைக்குத்தரிசி மா என்பது மறக்கப்பட்ட அல்லது சிறுசுகளால் அறியப்படாத புராதன சங்கதி தான்.

வார வசந்தம்

# இயற்கையோடு இணைதல்

ஆதிரியப்பன்

(சென்ற வாரத் தொடர்ச்சி...)

கைத்தொழில் மயமாகும் நிலையில் உச்சலாபத்தை பெற மேற்கொள்ளப்பட்ட கண்டுபிடிப்புகளும், நடவடிக்கைகளும் சூழலின் நிலையை சீரழித்தன.

மனித சுவாசத்திற்குரிய சுத்தமான காற்று நஞ்சுத்தன்மையுடன் சுவாசிக்கப்பட ஓகத்தொழிற்சாலை கழிவுகள் வழிவகுத்தன. கைத்தொழில் முன்னேற்றம் மனித நாகரிகத்தை வளர்க்க உதவிய அதே வேளை மனித இருப்புக்குரிய சூழலை பதங்கெட வைத்த பங்கு உயர்வாக உள்ளது.

உதாரணமாக மண்சட்டிகள் நீக்கப்பட்டு அலுமினியப் பாத்திரங்கள் பயன்படுத்தப்பட்டன, அலுமினிய உலோகத்தில் உள்ள நச்சுத் தன்மை உடலில் சேரும். இதனால் எமது உடலில் நோய் எதிர்ப்புத் தன்மை குறைவடைகின்றது. அத்துடன் புற்றுநோய்த் தன்மை ஏற்படவும் வாய்ப்புண்டு.

நாம் மண்பாத்திரங்கள் பயன்படுத்துவதன் தேவையை இப்பொழுது உணர வேண்டியவர்கள் ஆகின்றோம். மண்ணில் நச்சுத்தன்மை எதுவும் இருப்பதாக தெரியவில்லை. ஆயுள்வேத மருந்துகள் தயாரிக்கப்பட மண்சட்டி, பானைகள் பயன்படுகின்றன. இதற்குக் காரணம் சுவை, மருந்துப் பொருள்களின் உரிய மருத்துவத் தன்மையை நிலை மாற்றம் நிகழ்கையில் மாற்றி விடாமல் இருப்பதே ஆகும்.

அலுமினியப் பாத்திரங்கள் உணவுப் பண்டத்தின் சுவையை மாற்றி விடுகின்றது போல் இல்லாமல் மண்பாத்திரங்கள் மேலும் சுவையை அதிகரிக்க வைக்கின்றன. அத்துடன் பத்தியத் தன்மையை வளர்ப்பதாகவும் ஆயுள்வேத வைத்தியர்கள் குறிப்பிடுவர்.

மண்சட்டி உடைந்தால் மண்ணாகிவிடும். ஆனால் பிளாஸ்ரிக் முதலிய சில வகை உலோகங்கள் அழிவடைவதில்லாமல் சூழலுக்கு அச்சுறுத்தலாக நிலைத்து இருந்து விடுகின்றன.

சுனாமி என்கின்ற பேரிடர் நிகழ்ந்த பின்னர் இயற்கையைப் பாதுகாக்கும் எண்ணக்கருவை வளர்ப்பது மிக அவசியமாகின்றது. பூகம்பங்கள் நிகழ்வதற்கு பூமி மீது செலுத்தப்படும் அழுத்தங்கள் ஒரு காரணமாக இருப்பதாக புவியியல் வல்லுநர்கள் குறிப்பிடுகின்றனர். இதன் பிரகாரம் பூமி மீது அழுக்கங்கள் ஏற்படுத்தக்கூடிய பாரிய உயர் அடுக்கு மாடிக் கட்டடங்கள் அமைப்பதனை தடுக்க வேண்டியுள்ளது. இது எவ்வளவு தூரம் சாத்தியப்படும் என்று தெரியவில்லை.

ஆனால் சாத்தியப்படக் கூடிய பல விடயங்கள் இருக்கின்றன. பூமி மீது இயற்கையாக ஏற்படுத்தக்கூடிய அழுத்தங்களை நிறுத்த முடியும். யுத்தங்களால் 100 கிலோகிராம் முதல் 10000 கிலோகிராம் வரையான நிறையுடைய குண்டுகள் வீசப்படும்போது புவியோட்டின் மீது அதிர்வை ஏற்படுத்தி அதன் இருப்பை பாதிக்கின்றது.

எனவே யுத்த அனர்த்தங்களை நிறுத்துவதே இயற்கைக்கு நாம் செய்யும் அளப்பரிய பணிவிடையாகும்.

இயற்கையுடன் நாம் விரோதித்துக் கொண்டு அமைதியாக வாழ முடியும் என்பது இல்லாத ஒன்று. எனவே இயற்கையுடன் இணங்க அதனை அதன் தன்மையில் பேணி வாழ்வது மிகவும் புத்திசாலித்தனம்.

(முற்றும்)

# கருவில் சில மரணங்கள்

றொஷானி

[சென்றவாரத் தொடர்ச்சி]

ஐக்கிய நாடுகள் சபையின் பெண்களுக்கான அபிவிருத்தி நிதியத்தின் 2008/2009 ஆண்டு அறிக்கையில் உலகளாவிய ரீதியில் அனைத்து சம்பளம் வழங்கப்படாத குடும்பப் பணியாளர்களில் 60% இற்கு அதிகமானோர் பெண்களாவார். 2007/2008ஆம் ஆண்டு பொருளாதார ஆய்வின்படி ஒரு லட்சம் குழந்தை பிறப்பில் பெண் சிசுக்கொலை விகிதம் இந்தியாவில் 450 ஆக உள்ளது, சீனாவில் 45 ஆகவும் இலங்கையில் 58 ஆகவும் பாகிஸ்தானில் 320 ஆகவும் உள்ளது. எவ்வளவு உரிமைகளை, தினங்களைப் பிரகடனம் செய்தாலும் சரியான முறையில் அவை சமூகங்களிடையே சென்றடையவில்லை. முதலில் அதற்கான வழியைக் கண்டுபிடிக்க வேண்டியுள்ளது.

அரசியல் ஆட்சித்துறை, பொருளாதார வாய்ப்புக்கள், நீதி, அபிவிருத்தி மற்றும் பாதுகாப்புக்கான சர்வதேச உதவிகளைப் பெற்றுக்கொள்ளல் என்பன தொடர்பில் பெண்கள் தொடர்பான பங்களிப்பை வலுப்படுத்துவது அவசியமாக உள்ளது. உலகளாவிய ரீதியில் பெண்களின் நாடாளுமன்ற பிரதி நிதித்துவம் 1998ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் கடந்த வருடம் 18.4% அதிகரித்துள்ளதாக ஐக்கிய நாடுகள் ஆய்வு கூறுகின்றது.

விவசாயத் துறையில் ஆபிரிக்காவைப் பொறுத்தவரை பெண்கள் 80% பங்களிப்பை, ஆசியாவில் 50% பங்களிப்பைச் செய்கின்றனர்.

எது எவ்வாறிருப்பினும் பொருளாதார ரீதியிலும் சமூகரீதியிலும் பல்வேறு வழிகளில் பெண்கள் சுரண்டப்படுவது தொடர்கின்றமையை அலட்சியம் செய்ய முடியாது. மேலும் காலம் காலமாக பின்பற்றப்பட்டு வருகின்ற சமூகக் கட்டுப் பாடுகள் மற்றும் பிற்போக்குச் சிந்தனைகள் என்பன பெண்களின் முன்னேற்றத்திற்கு சில வழிகளாலும் முட்டுக் கட்டைகளாக இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென எண்ணியிருந்தவர் மாய்ந்துவிட்டார். வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போமென்ற விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார் என அன்று இறுமாப்போடு பாடிய பாரதி இன்று இருந்தால்... நீ கூறிய அந்த வேடிக்கை வினோத விந்தை மனிதர்கள் நம்மிடையே மாந்தையாய் உலவிக் கொண்டுதான் இருக்கின்றனர். எது எவ்வாறு இருந்தாலும் உலகளாவிய ரீதியில் பெண்களின் சமத்துவ நிலைப்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கு பெண்களின் அரசியல், பொருளாதார, சமூகப் பங்களிப்பை மென் மேலும் அபிவிருத்தி செய்யவேண்டிய நிர்ப்பந்தம் உள்ளதை எவரும் மறுக்க முடியாது.

[முற்றும்]

# யாருமே காணாத ஒரு துளி கண்ணீர்

கோகுலராகவன்



ஒருநாள் யாழ். நகரிலுள்ள புடைவைக்கடை ஒன்றுக்கு வேட்டி வாங்குவதற்காகச் சென்றிருந்தேன். கடையில் வேலைக்கு நின்றிருந்த பெண்பிள்ளையிடம் வேட்டிகளைக் காட்டுமாறு கேட்டேன். அவள் பல வகை வேட்டிகளைக் காட்டினாள்.

"இது என்ன விலை பிள்ளை?"

"ஆயிரத்து நீநூறு"

"மற்றது?"

"இது ஆயிரத்து ஐநூறு"

அவள் என்மீது எதுவித அக்கறையுடனும் வியாபாரம் செய்வதாக எனக்குத் தெரியவில்லை. மற்றப் பிள்ளைகளிடம் எதையோ கதைத்துச் சிரித்தபடியே, நான் கேட்கும் கேள்விகளுக்கும் பதில் சொல்லிக் கொண்டிருந்தாள்.

"பிள்ளை! ஒரு ஐநூறு, அறுநூறுக்குள் வேட்டி இல்லையா?"

"இல்லை. இதுதான் கிடக்கு"

அந்த வேளை அங்கு வந்த ஒரு மனிதர் "என்ன வேணும் தம்பி?" என்றார். முதலாளியாக இருக்கவேண்டும்.

"வேட்டி பார்க்கிறன்"

"என்ன விலைக்குள் பார்க்கிறீர?"

"ஒரு ஐநூறு.... அறுநூறு"

உடனே அவர் அந்தப் பிள்ளையிடம்,

"அந்த மேல்தட்டில இருக்கிறதை ஏறி எடும்" என்றார். அவள் எடுத்துக் காட்டினாள். அவையும் தரமான வேட்டிகள் தான். நான் அவற்றினுள் ஒன்றைத் தெரிவு செய்தேன்.

அந்த மனிதர் அந்தப் பிள்ளையைப் பார்த்துக் கேட்டார்,

"இதை ஏன் முதலில் காட்டவில்லை?"

அவள் எதுவும் பேசவில்லை.

"உமக்கு என்ன கெட்டித்தனம் இருக்கு? எத்தனை தரம் உமக்குச் சொல்லியிருக்கிறன், தொழிலில் கவனமாக இருக்க வேண்டுமென்று!.... சீச்சீ! இதுகளைப் பழக்கி எடுக்கமுடியாது தம்பி"

நான் தர்மசங்கடப்பட்டுக் கொண்டேன்.

"என்னத்தைப் படிச்சதுகள் எண்டு தெரியவில்லை" என்றவர் பிறகும் அந்தப் பிள்ளையைக் கூப்பிட்டுவிட்டு, எனக்குச் சொன்னார்,

"பொறும் தம்பி! ஒருவிசயம் இருக்கு"

என்ன விசயம்? அந்தப்பிள்ளைக்கு புடைவைக்கடை போட்டுக் கொடுக்கப் போகின்றாரோ?

"பிள்ளை! பன்னிர ஏழு (12X7) எத்தனை?"

என்னடா இது ?இந்தாள் முந்தி வாத்தியாரா இருந்ததோ? - எனது யோசனை.

அந்தப்பிள்ளை கொண்டு வந்த சாறிப்பையால் முகத்தை மூடிக் கொண்டாள்.

"பாரும் தம்பி! வாய்பாடு தெரியாது; ஓ..எல் படிச்சவவாம்"

அந்தப்பிள்ளை மெதுவாக அந்த இடத்தை விட்டு நகர்ந்து விட்டாள். அந்த மனிதர் என்னை விடுவதாக இல்லை. இன்னொரு பிள்ளையைக் கூப்பிட்டு -

"சொல்லும், ஒன்பேற்று ஒன்பது(9X9) எத்தனை?"

அந்தப் பிள்ளையும் சிரித்து மழுப்பி, "எம்மா பேய்வகோ" என்றபடி போய்விட்டாள்.

" பார்த்தீரா தம்பி? என்ன செய்யிறது, இவவும் ஓ..எல் படிச்சவவாம்" நான் மௌனமாக நின்றேன். பிறகு அவர் சொன்னார்,

"தம்பி என்னிடம் 15 பெண் பிள்ளைகள் வேலை செய்யினம். அவர்களில் ஒராளை 'பில்' போடுவதற்கு எடுக்க ஒரு 'ரெஸ்ற்' வைச்சனான். பன்னிரண்டாம் வாய்பாடு ஒருத்தருக்கும் ஒழுங்காகத் தெரியாது. பிறகெப்பிடி 'பில் கிளார்க்' ஆக்கமுடியும்?" பிறகு அந்தப் பிள்ளைகளின் படிப்பு, பள்ளிக்கூடம் போகும் ஒழுங்கு, அறிநிலைகள் பற்றியும், அக்கறைகள் பற்றியும் என்னுடன் விவாதித்தார். நான் மெதுவாகச் சொன்னேன்,

"இவர்களின்ஆசிரியர்களும் தவறு விட்டிருக்கலாம்" அவர் முகம் மாறியது.

"தம்பி! சாவகச்சேரி இந்துவில் மார்க்கண்டு வாத்தியார் மூன்றாம் வாய்பாடு பாடமாக்கேல்ல எண்டு எனக்கு அடிச்ச அடி இப்பவும் நோகுது"

படித்த மனிதர் போலத்தான் இருந்தார்.

"அதுமட்டுமே ஐந்தாம் வாய்பாடு பாடமாக்க என்ரை ஐயா அடிச்ச அடி.....! தம்பி என்ர ஐயா படிச்சது மூண்டாம் வகுப்புத்தான். ஆனா மனுசனுக்கு பதினாறு பதினாறு (16X16) கூடத் தெரியும். இவைக்கு விளையாட்டுத் தம்பி" அவர் பிறகு சொன்னார்

"அக்கறையிருந்தால் ஆர் சொல்லாமலும் முன்னேறலாம் தம்பி"

அவர் சொன்னது உண்மை போலத்தான் எனக்குப் பட்டது: கடையில் இருந்து வெளியேறும் வரை ஏனோ தெரியவில்லை 'நான் ஒரு ஆசிரியர்' என்று அவருக்குச் சொல்ல எனக்குக் கூச்சமாகவே இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்




'யுனிசெவ்' நிறுவன அனுசரணையுடன் சண்டிலிப்பாய் கல்விக்கோட்ட, கல்வித்தின விழா மானிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபர் ச.சிவனேஸ்வரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந்த விழாவில் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் உரையாற்றுவதையும் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அதிபர்வணபிதா யேசுதாஸ் அடிகளார், கோட்டக்கல்விப் பணிப்பாளர் சி.கந்தசாமி, இளைப்பாறிய கோட்டக் கல்விப் பணிப்பாளர் தனபாலசிங்கம், அதிபர் சிவனேஸ்வரன், இளைப்பாறிய கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம். (100)




தென்மராட்சி ப.நோ.கூ.சங்க சரசாலை வடக்கு (13) கிளைக்கான புதிய கட்டடம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வருகை தந்த யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம் மங்கள விளக்கேற்றி வைப்பதையும் அருகில் பிரதேச செயலாளர் செ.ஸ்ரீநிவாசன், தென்மராட்சி ப.நோ. கூ. சங்கத் தலைவர் செ.மகேஸ்வரன் மற்றும் ஆலயக் குரு ஆகியோரையும் படத்தில் காணலாம்.



யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் கடந்த மாதம் நடைபெற்ற ரொக்க வியாபாரத்தில் அதிக விற்பனையை மேற்கொண்ட பணியாளர்களுக்கு ஊக்குவிப்பு வழங்கப்பட்டது.

சங்கத் தலைவர் ப.கிரிதரன் பணியாளர் ஒருவருக்குப் பரிசு வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம்:குமார்)



ஊரெழு-சக்திபுரம் சிவபூரணி முத்தமிழ் மன்ற அறநெறிப் பாடசாலையில் மகா சிவராத்திரி விழா அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.மத்திய கல்லூரி தமிழ் ஆசிரியர் நா.தமிழிந்திரன் கலை நிகழ்வில் பங்குபற்றிய சிறுவனுக்குப் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம்.



தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் நிதி ஒதுக்கீட்டில் இருந்து சண்டிலிப்பாயில் புதிதாக பஸ் தரிப்பு நிலையம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையத்தை யாழ்.மாவட்டப் போக்குவரத்து உதவி ஆணையாளர் வி.பத்மநாதன் நாடாவெட்டித் திறந்து வைப்பதையும், அருகில் வலி.தென்மேற்கு பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் நிற்பதையும் படத்தில் காணலாம். (112)



சாவகச்சேரி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தைப்பூச விழா அண்மையில்நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சங்கத்தின் போஷகர் உப அதிபர் திருமதி ருக்மணி இராசரத்தினம் உரையாற்றுவதையும், நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம். (59)



வரணி வடக்கில் போலியோ நோயினால் பாதிக்கப்பட்ட இளம் தாய்க்கு தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தினரால் அண்மையில் சக்கர நாற்காலி வழங்கப்பட்டது.

கழக உறுப்பினர்களுடன் இருசக்கர நாற்காலியில் [illegible] குழந்தையுடன் காணப்படுவதைப் படத்தில் காணலாம். ([illegible])




பௌராணிகரும் ஓய்வுபெற்ற கிராமிய வங்கியாளருமாகிய நீர்வை ச.க.முருகையாவின் சமய சமூகப் பணிகளைப் பாராட்டி ''திருப்பணிச் செம்மல்'' விருது வழங்கும் விழா அண்மையில் நீர்வேலி ஸ்ரீகணேசா முன்பள்ளி மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் தொழிலதிபர் மா.சிவசுப்பிரமணியம் விருதுப் பத்திரத்தைக் கையளிப்பதையும் [illegible] ஆங்கில ஆசிரியர் த.ந.பஞ்சாட்சரம், மக்கள் வங்கி வடவலய உதவிப் பொது முகாமை[illegible] ஆனந்தராசா மற்றும் பிரமுகர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம். (72)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தர்கள் வரிசையில் முன்னிலையில் வைத்துக் கணிக்கப்படும் தேரடிச் செல்லப்பாச் சுவாமிகள்



நல்லூர் தேரடி செல்லப்பா சுவாமிகளின் 94ஆவது குருபூசைத் தினம் இன்றாகும். அதனையொட்டி இவ் ஆக்கம் பிரசுரமாகிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து இந்தியாவைப் போன்று இலங்கையிலும் சமயத்துறையில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டது. இலங்கையில் இந்த மறுமலர்ச்சிக்கு வித்திட்ட பெருமை பெரும்பாலும் கடையிற் சுவாமிகளையே சாரும்.

கடையிற் சுவாமிகளின் பூர்வீகம் குறித்து விரிவான தகவல்கள் எதுவும் தெரிய வரவில்லை. அக்காலத்தில் யாழ்ப்பாணம் பெரியகடைப் பகுதியில் அதிகம் சஞ்சாரம் செய்தபடியால் கடையிற் சுவாமி என்ற பெயர் அவருக்கு ஏற்பட்டதெனலாம்.

கடையிற் சுவாமிகளின் சீடர்களில் ஒருவரே, யோக சுவாமிகளின் குருவான செல்லப்பாச் சுவாமிகள் ஆவார். செல்லப்பாச் சுவாமிகளின் தந்தையாரான வல்லிபுரம் என்பவரின் முன்னோர் விவசாயத்தின் பொருட்டு வட்டுக்கோட்டையிலிருந்து நல்லூரில் சென்று குடியேறினர். செல்லப்பாச் சுவாமிகளின் தாயாரான பொன்னார் என்பவர் நல்லூரைச் சேர்ந்தவர். வல்லிபுரத்துக்கும் பொன்னாருக்கும் இரு புத்திரர்களும் இரு புத்திரிகளும் தோன்றினர். புத்திரர்களுள் மூத்தவரே செல்லப்பாச் சுவாமிகள் ஆவார். தமது சகோதரிகளுள் ஒருவரான செல்லாச்சி என்பவருடன் செல்லப்பாச் சுவாமிகள் தமது பிற்காலத்தில் வாழ்ந்து வந்ததாகத் தெரிய வருகிறது. செல்லப்பாச் சுவாமிகள் வசித்து வந்த கொட்டில் நல்லூர் தெற்கு வீதியில் தேர்முட்டிக்கு எதிராக அமைந்திருந்தது.

செல்லப்பாச் சுவாமிகள் ஆங்கிலமொழியும் கற்றிருந்தார். சில காலம் யாழ்ப்பாணக் கச்சேரியில் 'ஆராய்ச்சி'யாகவும் தொழில் புரிந்தாரெனக் கூறப்படுகிறது. அந்தக் காலத்திலேயே செல்லப்பாச் சுவாமிகளுக்கு ஆன்மீகத் துறையில் நாட்டம் ஏற்பட்டது. பல மணி நேரம் நல்லூர் தேர்முட்டிப் படிகளில் தியானத்தில் இருப்பார். தியான நிலை முதிர்ந்தபடியால் 'ஆராய்ச்சி' உத்தியோகத்தைக் கைவிட்டுவிட்டார்.

கடையிற் சுவாமிகள் நல்லூர் வீதிகளில் சஞ்சாரம் செய்தபொழுதுதான் செல்லப்பாச் சுவாமிகள் அவரைச் சந்தித்திருக்கவேண்டும். ஒருமுறை கடையிற் சுவாமிகள் ஒரு கடலைக் காறியிடமிருந்து ஒரு வெள்ளி ரூபாயைப் பெற்று அதை வெற்றிலையில் வைத்து மடித்துச் செல்லப்பாச் சுவாமிகளிடம் கொடுத்து அவரது தலையின்மீது தாம் கையில் வைத்திருந்த குடையை வைத்து அசைத்துவிட்டு ஓடும்படி விரட்டினார். இதுவே செல்லப்பாச் சுவாமிகளுக்கு குருதீட்சையாக அமைந்து ஞானோதயம் ஏற்படக் காரணமாய் அமைந்ததென்பர்.

செல்லப்பர் தமது குருநாதர் கடையிற் சுவாமிகளைச் சந்தித்த பின்னர் உலகத் தொடர்புகள் அனைத்தையும் முற்றாகத் துறந்து, நல்லூர் தேரடியையும், தேர்முட்டியையும் தமது பிரதான இருப்பிடமாகக் கொண்டார். தம்மருகில் எவரையும் அணுக விடாது விரட்டிவிடுவார். எப்பொழுதும் வெறித்த பார்வையுடன் தமக்குத் தாமே ஏதோ பேசிக் கொண்டிருப்பார். இவற்றைப் பார்த்த பொதுமக்கள் அவருக்கு விசர் பீடித்துள்ளதாக நினைத்து, அவரை 'விசர்ச் செல்லப்பா' என அழைக்கத் தொடங்கினர். ஆயினும் செல்லப்பாச் சுவாமிகள் அது குறித்துப் பொருட்படுத்தினாரில்லை. பின்னர் ஒருசமயம், தமது சீடரான யோகசுவாமிகளுக்கு செல்லப்பாச் சுவாமிகள் "செல்லப்பன் இங்கு சாமி, தம்பிரான் என்றெல்லாம் பெயர் விட்டுச் சாகான். ஒரு விசரன், நாயைப் போல வீட்டுக்கு வீடு வாங்கித் தின்றான், செத்துப்போனான், என்ற சொல்லையே விட்டுப் போவான்" என்றும் "சாமி பண்ணாதே, சாமி பண்ணினால் யாழ்ப்பாணத்தார் தலைமேல் ஏறி விளையாடுவார்கள்" என்றும் கூறியதாகச் சொல்லப்படுகிறது.

சாதாரண மக்கள் செல்லப்பாச் சுவாமிகளை ஒரு விசரன் எனக் கருதினாலும் அந்த வேளையில் ஒருசிலர் சுவாமிகளின் அதீத ஆற்றலை உணர்ந்திருந்தனர். அத்தகையோர் மூலமாகவே யோக சுவாமிகள் தமது குருநாதரைச் சந்தித்திருக்கவேண்டும்.

தமது சீடரான யோகசுவாமிகளுக்கு செல்லப்பாச் சுவாமிகள் உபதேசித்த வாக்கியங்களே "ஒரு பொல்லாப்புமில்லை" "முழுவதும் உண்மை" "நாமறியோம்" "எப்பவோ முடிந்த காரியம்" என்பனவாகும். இவை யோக சுவாமிகள் மூலம் பலருக்கு உபதேசிக்கப்பட்டு மகா வாக்கியங்கள் என இன்றும் போற்றப்படுகின்றன.

தமது குருநாதரான செல்லப்பாச் சுவாமிகளிடம் உபதேசம் பெற்ற பின்னர் யோக சுவாமிகள் தமது குருநாதரின் திருவடியைத் தொடர்ந்து அவருடனேயே திரிந்தார். குருநாதரான செல்லப்பாச் சுவாமிகள் தமது சீடனைப் பல சோதனைகளுக்கு உட்படுத்தினார். இருவருமாகச் சேர்ந்து சமைத்த உணவை, உண்பதற்கு முன்னர் செல்லப்பாச் சுவாமிகள் உணவுப் பாத்திரங்களை உடைத்தெறிந்து விடுவார். குளிப்பதற்கென கீரிமலைக்குச் சென்று குளிக்காமலேயே திரும்புவர். இவற்றையெல்லாம் காணும் பெரும்பாலான பொதுமக்கள் இவர்கள் உண்மையில் பித்துப் பிடித்தவர்களே எனக் கருதினாலும் இவர்களிடம் தெய்வீகசக்தி குடிகொண்டுள்ளதாக நம்பி அவர்களை போற்றித் துதித்த பல அடியவர்களும் இருக்கவே செய்தனர்.

வருடாவருடம் பங்குனி மாத முதல் திங்களன்று இவ்விரு மகான்களும் மட்டுவிலிலுள்ள பன்றித்தலைச்சி அம்மன் கோயிலுக்குச் சென்று பொங்கிச் சாப்பிடுவது வழக்கமாயிருந்தது.

செல்லப்பாச் சுவாமிகளுக்கு யோக சுவாமிகளைத் தவிர கதிரவேலு என்ற சீடரும் இருந்தார். ஒருசமயம் தமது இரு சீடர்களையும் செல்லப்பாச் சுவாமிகள் எங்காவது போய்விடும்படி துரத்திவிட்டாராம். அங்கிருந்து புறப்பட்ட யோகசுவாமிகள் கால்நடையாகக் கதிர்காமம் சென்றதை அறியாத உறவினர் செல்லப்பாச் சுவாமிகளிடம் சென்று யோக சுவாமிகளைப் பற்றி விசாரித்த போது "அவன் செத்துப் போனான்" என்று கூறினாராம். விசரன் பேச்சு என அவர்கள் எண்ணினாலும், யோகசுவாமிகள் உலகத்தைப் பொறுத்தவரை இறந்துவிட்டதாக குறிப்பிடவே செல்லப்பாச் சுவாமிகள் அவ்விதம் கூறியதாகக் கொள்ளமுடிகிறது.

செல்லப்பாச் சுவாமிகள் விசிறி கட்டுவதிலும், தென்னோலையைக் கொண்டு 'கல்லை' தைப்பதிலும் விற்பன்னராக விளங்கியதாகவும் தெரிய வருகிறது.

பிற்காலத்தில் நோய்வாய்ப்பட்டுப் படுக்கையிலிருந்த செல்லப்பாச் சுவாமிகள் பங்குனி மாத அச்சுவினித் திதியில் மகா சமாதியடைந்தார். தாம் உயிர் நீப்பதற்கு முன்னரே, தமது மரணத்தின் பின்னர் தமது உடலை அக்கினியுடன் சங்கமிக்கச் செய்ய வேண்டுமெனவும், தமக்குச் சமாதி வைக்கப்படலானதெனவும் செல்லப்பாச் சுவாமி கூறி வைத்திருந்தார். அதற்கமைய அவரது மரணத்தின் பின்னர் அவரது விருப்பப்படியே உடல் தகனம் செய்யப்பட்டது.

தமது குருநாதர் தமக்கு உபதேசித்த மகாவாக்கியங்கள் குறித்து பிற்காலத்தில் யோகசுவாமிகள் கீழ்க்கண்டவாறு பாடி வைத்தார்.

**செல்லப்பன் என்னுந் திருவுடையான் தேரடியில்**
**பொல்லாப் பில்லையென்றான் போற்று,**

**முழுது முண்மை என்று முனிவனவன் சொன்னான்**

**எழுத முடியா திதை**

**நாமறியோம் என்னும் நறிய திருவாக்குச்**
**சேமமுறச் சொன்னான் தெரி**

**முடிந்த முடிபென்று முன்னாளிற் சொன்னான்**
**அடியார்கள் முன்னர் அவன்.**

செல்லப்பாச் சுவாமிகள் அன்று சொல்லி வைத்துச் சென்ற மகாவாக்கியங்களில் பொதிந்துள்ள உண்மைகளை மனதிற் கொண்டு நாமும் நிலையற்ற இம்மனிதப் பிறப்பில் உலகில் நாம் வாழும் கால முழுதும் இறைநம்பிக்கையுடன் நல்லவற்றை நினைந்து, நல்லவற்றையே செய்து நற்கதி பெற முயல்வோமாக. *

தொகுப்பு: சதரா

## புத்தக சாலை

### கண்மணி



மாணவச் செல்வங்களின் ஆக்கத்திறனைச் சுமந்து 'கண் மணி' எனும் மாதாந்த சிறுவர் இதழ் வெளிவந்து கொண்டிருக்கிறது.

மாணவர்களின் ஆக்கத்திறன் படைப்புகளான கவிதை, சிறுகதை, கட்டுரை ஓவியங்கள் மற்றும் பல விடயதானங்களைச் சுமந்து 'கண்மணி' மாதாந்தம் வெளிவருகிறது.

'மாணவப் பருவம் மகத்தானது இப்பருவத்தில் விதைக்கப்படும் எண்ணங்களே வாழ்க்கையை வடிவமைக்கின்றன. இளமையில் உகந்த வழிகாட்டல் கிடைப்பின் எல்லோரும் சாதனையாளர் ஆகலாம். அந்த உயர்ந்த இலட்சியத்தை நோக்கி கண்மணி கருவாகி, உருவாகி வந்துள்ளது என்று இதழின் ஆசிரியர் இரா.ஜெயக்குமார் முதல் கண்மணி இதழில் கூறியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

### அபிநயப் பாடல் தொகுப்பு



யாழ்ப்பாணம் கல்வியியற் கல்லூரியின் சங்கீதத்துறை விரிவுரையாளர் திருமதி விக்னேஸ்வரி நரேந்திராவின் தொகுப்பாக "பட்டாம் பூச்சிகள்" அபிநயப் பாடல்கள் வெளிவந்திருக்கிறது.

"இசை எவரையும் இசைவிக்கும்" அந்த வகையில் சிறுவர்களுக்கான பாடங்களும் அவற்றை இசைவிக்கும் முறைகளையும் இந்தத் தொகுப்பில் தொகுப்பாசிரியர் கலை ரசனையோடு சொல்லியிருக்கிறார்.

இணுவில் பண்டிதர் அமரர் கார்த்திகேசு மற்றும் பல மூத்த கவிஞர்களினதும் இளைய கவிஞர்களினதும் பாடல்களைத் தொகுத்து பழமையில் புதுமையைப் புகுத்தியிருக்கிறார் என்றால் மிகையில்லை. மொத்தத்தில் இந்த "அபிநயப் பாடல்" தொகுப்பு சிறுவர்களின் மனதில் "பட்டாம் பூச்சி!" யாய் சிறகடிக்கும்.

### வாக்கிய பஞ்சாங்கம்



யாழ்ப்பாணம் இரகுநாதையர் சோதிட பரிபாலன மடத்தினரால் ஐ.சி.இரகுநாதையர் அவர்கள் சகோதரரின் புத்திரர் இ.வெங்கடேச ஐயராலும், ஜேஷ்ட புத்திரன் வெ.இரகுநாதையராலும் கணிக்கப் பெற்று 'விரோதிவருஷ' வாக்கிய பஞ்சாங்கம் வெளிவந்துள்ளது.

புதிதாய் மலர இருக்கின்ற 'விரோதி வருஷ'த்தின் நாள், பலாபலன்களை இந்த வாக்கிய பஞ்சாங்கத்தில் கணித்துக்கொள்ளக் கூடிய வகையில் மிகவும் தெளிவான அச்சுப்பதிவுடன் வெளிவந்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

### சிவதத்துவ மலர் - 2009



வவுனியா கோவிற்குளம் அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேசுரர் ஆலய மகாகும்பாபிஷேக விழாவையொட்டி 'சிவதத்துவ மலர்' வெளியிடப்பட்டுள்ளது.

ஆலய அறங்காவலர் சபையினால் வெளியிடப்பட்டுள்ள இந்நூல் மிகவும் அழகான நேர்த்தியான முறையில் வர்ணப் பக்கங்களாக வெளிவந்துள்ளது.

ஆலயத்தில் இடம்பெறுகின்ற போதகைள் சமூக, சமய அறப்பணிகள், ஆலய வரலாற்றுப் பதிவுகள் போன்றவற்றுடன் பல விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மேலும் பல சமயக் கட்டுரைகளும் இந்த நூலினை அலங்கரிக்கின்றன. "சிவதத்துவ மலர்" அகிலாண்டேசுரர் ஆலய மகோற்சவ விழா வெளியீடாக வெளியிடப்பட்டாலும் சைவசமயியாகிய ஒவ்வொருவருக்கும் சிறந்த நூல் என்று சொன்னால் சாலப் பொருத்தமாகும். "சிவதத்துவ மலர்" சைவ[illegible]ருக்கும் ஒரு வரப்பிரசாதம்.

## நவக வைத்தியர்களுக்கு தெற்கே இடமாற்றம்

வேலணை, மார்ச்28

ஊர்காவற்றுறை, நெடுந்தீவு பிரதேசங்களுக்கான மாவட்ட வைத்திய அதிகாரிகள் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர்.

ஊர்காவற்றுறையில் மாவட்ட வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றிய டாக்டர் புண்ணியமூர்த்தி அருணன் பதுளைக்கும், நெடுந்தீவில் கடமையாற்றி டாக்டர் திருமதி பாலசிங்கம் தாமரைச்செல்வி நுவரேலியாவுக்கும் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர்.

இந்நிலையில் இவ்வைத்தியசாலைகளுக்குப் புதிய மாவட்ட வைத்திய அதிகாரிகள் நியமிக்கப்படாமையால் பல்வேறு கடமைகளையும் மேற்கொள்வதில் சிரமங்கள் எதிர்கொள்ளப்படுவதாக ஏனைய அலுவலர்களும் பொதுமக்களும் குறிப்பிடுகின்றனர். (1-267)

## நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் இடம்பெற்ற கலை இலக்கியப் பெருவிழா போட்டி முடிவு

நல்லூர், மார்ச்28

நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவில் நடத்தப்பட்ட கலை இலக்கியப் பெருவிழா - 2009இன் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

மாவட்ட மட்டத்தில் நடைபெறவுள்ள போட்டிகளை அடுத்து இறுதிப் போட்டிகள் கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நடத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

போட்டி முடிவுகள் வருமாறு:

**கவிதையாக்கம்**

*கனிஷ்ட பிரிவு:* கு.தட்சாயினி (நல்லூர் இ.த.பெ.பாடசாலை), பு.ரிஷிகேசன் (நல்லூர் இ.த.பெ.பாடசாலை), அ.மதுரிக்கா (நல்லூர் இ.த.பெ.பாடசாலை), ச.சஞ்சீவன் (கொக்குவில் இந்துக் கல்லூரி).

*சிரேஷ்ட பிரிவு:* ப.போஜினி (கொக்குவில் இந்துக் கல்லூரி), ஸ்ரீ.சுஜீபா (இந்து மகளிர் கல்லூரி), கு.ஜனனி (கனகரத்தினம் ம.ம.வித்தியாலயம்), சி.சிந்துஜா (கோண்டாவில் இந்து ம.வித்தியாலயம்).

*திறந்தபோட்டி:* சி.சிவதாசன் (அரியாலை ஜே/95), ச.வாகீசன் (இணுவில் ஜே/115), சோ.இராகுலன் (இணுவில் ஜே/115).

*திறந்த போட்டி (ஆங்கிலம்):* ம.துளசிவந்தனா (நல்லூர் ஜே/106), க.யோகராசா (அரியாலை ஜே/95).

**சிறுகதையாக்கம்**

*கனிஷ்ட பிரிவு:* ச.வித்யா (இந்து மகளிர் கல்லூரி), ஜெ.பவதாரணி (இந்து மகளிர் கல்லூரி), சி.உஷாயினி (இந்து மகளிர் கல்லூரி).

*சிரேஷ்ட பிரிவு:* ஸ்ரீ.சுஜீபா (இந்து மகளிர் கல்லூரி), ர.மதுரன் (கனகரத்தினம் ம.ம.வித்தியாலயம்), செ.பிரதீபா (கனகரத்தினம் ம.ம.வித்தியாலயம்).

*திறந்த போட்டி:* த.கணேஸ்வரி (அரியாலை ஜே/94), சி.சிவதாசன் (அரியாலை ஜே/95), தி.திலீபன் (கோண்டாவில் ஜே/119).

*திறந்தபோட்டி (ஆங்கிலம்):* க.யோகராசா (அரியாலை ஜே/95), ம.துளசிவந்தனா (நல்லூர் ஜே/106).

**கட்டுரையாக்கம்**

*கனிஷ்ட பிரிவு:* சி.கிஷோத் (இந்துக் கல்லூரி), இ.துஷானி (கொக்குவில் இந்துக் கல்லூரி), ம.தமிழினி (இந்து மகளிர் கல்லூரி).

*சிரேஷ்ட பிரிவு:* க.உஷாந்தன் (இந்துக் கல்லூரி), கு.ராதிகா (இந்து மகளிர் கல்லூரி), ஞா.பிரதீபா (கோண்டாவில் இந்து ம.வித்தியாலயம்.

**பாடலாக்கம்**

*திறந்த போட்டி:* சி.சிவதாசன் (அரியாலை ஜே/95), க.குமணன் (அரியாலை ஜே/91), சு.வள்ளியம்மை (திருநெல்வேலி ஜே/110), இ.ஸ்ரீகஜலட்சுமி (கொக்குவில் ஜே/123). (203-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணக் கல்வி நிலையம்
## (The Jaffna Education Centre)
(நாதன்ஸ் சினிமா முன்பாக மேல்மாடியில்)

**Spoken English with Grammar**
'சிங்களம்'
**Shorthand and Typing** இருமொழிகள் மூலமும்
கற்பிக்கப்படுகின்றன.
**புதிய பிரிவு ஆரம்பம்: 28.03.2009**
வெளிநாடு செல்பவர்களுக்குக் குறுகிய காலத்தில் எழுத, வாசிக்க, பேசக் கற்றுக்கொடுக்கப்படும். முடிவில் 'சான்றிதழ்' வழங்கப்படும்.
(83856) நிர்வாகி:- இ.லோகநாயகி.



## கூறுவிலை

எமது சங்கத்தின் பாற்பொருள் உற்பத்தி அலகு வர்ணம் பூசுவதற்குக் கூறுவிலை கோரப்படுகின்றது. கூறுவிலைதாரர்கள் மேற்படி கட்டடத்தைப் பார்வையிட்டுத் தேவையான பெயின்ற் வகைகளின் பட்டியலைச் சமர்ப்பிப்பதுடன் எதிர்பார்க்கும் கூலித் தொகையையும் குறிப்பிட்டு 02.04.2009ஆம் திகதிக்கு முன்னர் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்,
யாழ்.மாவட்ட அரிசிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து),
(சி/557665) திருநெல்வேலி கிழக்கு,கோப்பாய்.


## இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு,மார்ச்28

யாழ்.மக்கள் வசந்த எழுச்சிப் பேரவை ஏற்பாட்டில் யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட லீக்குகளில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் வெற்றியீட்டிய அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்டப் போட்டிகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் ஆரம்பமாகவுள்ளன.

இன்று இடம்பெறும் போட்டிகளில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

* யாழ்.உதைபந்தாட்ட லீக்கைச் சேர்ந்த பாஷையூர் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம் எதிர் வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கைச் சேர்ந்த நவாலி சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகம்.
* வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கைச் சேர்ந்த மானிப்பாய் 'றெட் றேஞ்சர்' விளையாட்டுக் கழகம் எதிர் யாழ்.உதைபந்தாட்ட லீக்கைச் சேர்ந்த யாழ்ப்பாணப் பல்கலைக் கழக விளையாட்டு அணி. (50-86)

## சனசமூக நிலையத்துக்கு அடிக்கல் நாட்டப்பட்டது

யாழ்ப்பாணம்,மார்ச்28

அளவெட்டி, மண்டு மண்டைப் பகுதியில் ஸ்ரீ ஞானவைரவர் சனசமூக நிலையத்துக்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நேற்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்றது.

சனசமூக நிலையத்துக்கான அடிக்கல்லை வலிகாமம் மேற்குப் பிரதேச சபையின் முன்னாள் தலைவர் வே.மகேந்திரன் நாட்டினார்.

இந்த வைபவத்தில் சனசமூக நிலைய நிர்வாகிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

## இளைஞர் காயம்

யாழ்ப்பாணம்,மார்ச்28

மிதிவண்டியில் சென்ற இளைஞரின் தலையில் வீதியோர மரத்திலிருந்து தேங்காய் விழுந்ததில் அவர் காயமடைந்தார்.

இச்சம்பவம் கடந்த 25ஆம் திகதி காலை தாவளை இயற்றாலையில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த இராசேந்திரம் விஜிதரன் (வயது 21) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (50-207)


## இறைச்சிக்கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம்செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர். (83857)

## கார் தேவை

நல்ல நிலையிலுள்ள 'வோக்ஸ் வகன்' அல்லது மொறிஸ் 1000, கார் தேவை. தரகர் தேவையில்லை.
தொடர்பு: 060-221-4095 (83860)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

திருமதி
பொன்னையா
பாக்கியம்

தோற்றம்
14 * 08 * 1927

மறைவு
27 * 02 * 2009



கடந்த 27.02.2009 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவியின் அந்தியேட்டி நிகழ்வுகள் 27.03.2009அன்று வில்லூன்றித் தீர்த்தக் கரையில் நடைபெற்றன. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (29.03.2009) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அன்றையதினம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மடத்தடி ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி,
சிறுப்பிட்டி வடக்கு,
நீர்வேலி.
(83750)

செ.பொன்னையா (கணவர்),
பொ.பாலகிருஷ்ணேஸ்வரர் குடும்பத்தினர்,
பொ.கந்தசாமி குடும்பத்தினர் (கனடா),
திருமதி ரஞ்சிதராணி குகநேசன் குடும்பத்தினர்,
வே.இரத்தினவேல் (முகாமைத்துவ உதவியாளர்),
திருமதி இ.விபலினிதேவி (ஆசிரியை).

## இருபதாம் ஆண்டு நினைவஞ்சலி



அவனியில்
22 . 11 . 1943

அவனடியில்
07 . 04 . 1989

### அமரர் கனகரட்ணம் பரராஜசிங்கம் S.L.A.S.
### (முன்னாள் உதவி அரச அதிபர், குச்சவெளி)

**திதி: துதியை**


ஆண்டுகள் இருபது ஆன போதும்
ஆறவில்லை எம் இதயங்களின் வேதனை
அன்போடும் பண்போடும் எங்களுடன் வாழ்ந்தீர்கள்
என்றும் உங்கள் நினைவுடனே வாழ்கின்றோம்
என்றும் எங்கள் உயிர் உள்ளவரை
உங்களை மறவோம்.

15, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டி நிற்கும்:
மனைவி, மகன்மார், மருமகன்மார்,
பேர்த்தி, உற்றார், உறவினர். (83858)

## மரண அறிவித்தல்

### நீக்கிலாப்பிள்ளை அல்பேட்



சில்லாலையைப் பிறப்பிடமாகவும் டென்மார்க்கை வசிப்பிடமாகவும் கொண்ட நீக்கிலாப்பிள்ளை அல்பேட் 13.03.2009 அன்று டென்மார்க்கில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நீக்கிலாப்பிள்ளை - ஆனாசி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான றோக் - இசபேல் தம்பதியரின் அன்பு மருமகனும் தங்கம்மா, காலஞ்சென்றவர்களான பொஞ்சின், அருட்தந்தை பீற்றர் மற்றும் திரேசா புஷ்பம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் திரேசம்மா (றோஸ்) அவர்களின் அன்புக் கணவரும் வனஜா, கிரிஜா, குமார், ஜெகன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் அந்தோனிப்பிள்ளை (மறையாசிரியர்), அன்ரனி நாயகம் (பண்டத்தரிப்பு ப.நோ.கூ.சங்கம்), றேணுகா, றெமி ஆகியோரின் அன்பு மாமனும் தர்சினி, மதி, பெகின், கரோவ், கவோண் கமிலஸ், ஜெனி, பெனி, பிங்கி, யூட்சன், ஜெரூஸ்னி, ஜெனூஸ்னி ஆகியோரின் பாசமிகு பேரனும் குயின்சி, மிதுலன், ஓவியா ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று (28.03.2009) சனிக்கிழமை டென்மார்க்கில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சில்லாலை,
பண்டத்தரிப்பு. (83850)

தகவல்:
செ.அன்ரனிநாயகம் (மருமகன்).

## 31ஆம் நாள் நினைவலைகளும் நன்றிநவிலலும்



அப்பாவே...
காற்றுடன் கலந்ததுவே நிந்தன் உயிர்
இன்னும் கூட நம்பமறுக்கிறது எங்கள் மனம்
நிஜமற்ற இவ்வுலகில் நீ நடந்த தேசமெல்லாம்
நினைவிழக்க முடியாமல் நின்ற சுவடுகளைத்
தேடுவது உங்களுக்குத் தெரியவில்லையா?
வாழ்ந்தது போதுமென்று வானுலகு சென்றீரே
ஊரே உன் இழப்பால் உணர்விழந்து
தவிக்குதையா
சாவு வந்து சடுதியிலே நினை அழைத்த மாயமென்ன
சோகமே உருவான மனைவியும் சோபையை
இழந்த பிள்ளைகளும்
அன்பு மருமக்களின் அலறல்களும்
அருமைப் பேரர்களின் சிதறல்களும்
உறவுகளின் கண்ணீர் கதறல்களும்
நின் செவிகளில் ஒலிக்கவில்லையா?
தீராத பாச அலை நீ பேசிய அன்பு மொழிகளோடு
மீட்டுகின்றோம் மீண்டும் வருவாயென!

### அமரர் க.சோணைமுத்து (சோமு)

மண்ணில்
08 * 10 * 1941

விண்ணில்
26 * 02 * 2009

எமது அன்புத் தெய்வத்தின் பிரிவுத் துயரின்போது கலந்துகொண்டு ஆறுதல் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள், தந்தி, தபால், தொலைபேசி மூலமாக அனுதாபம் தெரிவித்தோர், அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டோர், எம்முடன் தோள் கொடுத்து உதவிகள் வழங்கிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (28.03.2009) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் கிரியைகளில் கலந்துகொண்டு ஆத்மசாந்திக்குப் பிரார்த்திக்குமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

வீரபத்திரர் கோயிலடி,
கச்சாய் வீதி, சாவகச்சேரி. (சி/557644)

நீங்கா நினைவுடன்
குடும்பத்தினர்.

## 45ஆம் நாள் நினைவஞ்சலி




நீதனே..............!
காற்றோடு வந்த உந்தன் மரணச் செய்தியை
இன்னும்கூட நம்ப மறுக்கின்றது எங்கள் மனம்
நிஜமற்ற இவ்வுலகில் நீ நடந்த தேசமெல்லாம்
நினைவிழக்கமுடியாமல் உந்தன் சுவடுகளை
தேடுவது உனக்குத் தெரியவில்லையா?
வாழும் வயதினிலே வரலாறாகிப் போனாயே
ஊரே உன் இழப்பால் உணர்விழந்து தவிக்குதையா
சாவு வந்து சடுதியிலே உனை அழைத்த மாயமென்ன?
சோகமே உருவான அப்பாவும், சோபையே இழந்திட்ட அம்மாவும்
அன்புத் தம்பியின் அலறல்களும் ஆசைத்தங்கையின்
சிதறல்களும்
உறவுகளின் கண்ணீர் கதறல்களும்
உந்தன் கண்களுக்கு தெரியவில்லையா?
தீராத பாச அலை, நீ பேசிய அன்புமொழிகளோடு
மீட்டுகின்றோம் மீண்டும் நீ வருவாயென....

எமது நீதனின் பிரிவுத்துயரின்போது பங்குகொண்டு ஆறுதல் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள், வேலணை வைத்தியசாலை ஊழியர்கள், வைத்திய நண்பர்கள் தந்தி, தபால் தொலைபேசி மூலமாக அனுதாபம் தெரிவித்தோர், அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்ட நாவலர் சனசமூக நிலையம், வல்லியப்பா ஆலய பரிபாலன சபையினருக்கும், எமக்கு உதவிகள் வழங்கிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இன்று (28.03.2009) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

4ஆம் வட்டாரம், நயினாதீவு. (சி/557643) நீங்காத நினைவுகளுடன்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நடமாடும் அஞ்சலக சேவை மூலம் மாணவர்களுக்கு அஞ்சல் அடையாள அட்டை வழங்கும் நிகழ்வு அண்மையில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் தபாலகப் பதவிநிலை உத்தியோகத்தர் எ.சுந்தரலிங்கம் அஞ்சல் அடையாள அட்டையின் தேவைபற்றி மாணவர்களுக்கு விளக்குவதை முதற் படத்திலும், மாணவர்கள் அமர்ந்திருப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம். அஞ்சல் அடையாள அட்டைக்கான விண்ணப்பப்படிவங்கள் பூர்த்தி செய்யப்படுவதையும், வடமாகாண பிரதித் தபால்மா அதிபர் வி.குமரகுரு மாணவன் ஒருவனுக்கு அஞ்சல் அடையாள அட்டையை வழங்குவதையும் அடுத்துள்ள இரு படங்களில் காணலாம். (படங்கள்:-சுந்தா)

## குடாநாட்டில் முதல் தடவையாக பெண்களுக்கும் மின் இணைப்புப் பயிற்சி

நவாலி,மார்ச் 28

குடாநாட்டில் முதல் தடவையாக மின் இணைப்புப் பயிற்சியில் பெண்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் ஆனைக்கோட்டைக் கரைப்பிரான் ஆலயத்துக்கு அருகில் இயங்கும் தொழில் பயிற்சி நிலையத்திலேயே பெண்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

இந்தப் பயிற்சி கடந்த ஒக்ரோபர் மாதம் ஆரம்பிக்கப்பட்டுத் தற்போது நிறைவு பெற்றுள்ளது. 6 மாத காலம் நடைபெற்ற இந்தப் பயிற்சியுடன் நீர்க்குழாய் பொருத்துதல், தையல் பயிற்சிகளும் வழங்கப்பட்டன. மின் இணைப்புப் பயிற்சியை 20 மாணவர்களும், நீர்க்குழாய் பொருத்தும் பயிற்சியை 15 மாணவர்களும், தையல் பயிற்சியைப் 10 மாணவர்களும் நிறைவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பயிற்சிகளின் நிறைவாகத் தொழிற்பயிற்சிக் கண்காட்சி ஒன்று கடந்த 20 ஆம் திகதி பயிற்சி மண்டபத் தில் நடைபெற்றது. சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அபிவிருத்தி உதவியாளர் டினேஸ் குணரத்தினம், ஆனைக்கோட்டை கிராம சேவையாளர் நிசாந்தன், பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் பொன்மதி, நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.முரளி ஆகியோர் கலந்து கொண்டனர். (50-100)

## சுருக்கெழுத்தாளர் சங்கத்தின் ஆண்டு நிறைவு விழாவும் சான்றிதழ் வழங்கும் வைபவமும்

யாழ்ப்பாணம் ,மார்ச் 28

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தின் 23 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் 20 ஆவது சான்றிதழ் வழங்கும் வைபவமும் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு மேற்படி கழகத்தில் நடைபெறவுள்ளன.

கழகத் தலைவர் எஸ். குலசிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ். தொழில்நுட்பவியல் கல்லூரி மாகாணப் பணிப்பாளர் பேராசிரியர் என்.யோகராஜன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

இந்த நிகழ்வில் வடமராட்சி தென்மேற்குப் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன், வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்வர். (50-204)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## உலர் உணவு நிவாரணம் விநியோகம்

நவாலி,மார்ச் 28

மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் சமுர்த்தி நிவாரண உலர் உணவுப் பொருள்கள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன. (50-100)

## மதிய உணவுக்கு கடலுணவுகள்; அறிக்கை சமர்ப்பிக்க அறிவுறுத்து

கோப்பாய்,மார்ச் 28

பாடசாலைகளில் கடலுணவுகளை வழங்குவது தொடர்பாகப் பாடசாலைச் சமூகத்துடன் கலந்தாலோசித்து மீளாய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு அதிபர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பாடசாலைகளில் நடைமுறைபடுத்தப்பட்டுவரும் சத்துணவு வழங்கும் திட்டத்தின் கீழ் மாணவர்களின் மதிய உணவுடன் ரின்மீனும் சேர்க்கப்பட்டிருந்தது.

சத்துணவுத் திட்டத்தின் கீழ் ரின்மீன் வழங்குவதை நல்லை ஆதீனம் உட்படப் பல இந்து அமைப்புக்கள் கண்டித்திருந்தன. ரின்மீனுக்குப் பதிலாக வேறு சைவ உணவுகளை வழங்குமாறு அவை கோரிக்கை விடுத்திருந்தன.

இந்நிலையில் மதிய உணவுடன் தொடர்ந்து ரின்மீன் வழங்குவதா, இல்லையா என்பதைப் பாடசாலைச் சமூகத்துடன் கலந்தாலோசித்து எழுத்துமூலம் அனுப்பி வைக்குமாறு பாடசாலை [illegible] பர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது [illegible] தெரிவிக்கப்பட்டது. (50-72)

## வீதிகளில் விளையாட்டு மைதானம்; மக்கள் போக்குவரத்தில் அசௌகரியம்

வண்ணை,மார்ச் 28

வீதிகளில் பந்து மற்றும் பேணி விளையாட்டில் ஈடுபடும் இளைஞர்களால் வீதியைப் பயன்படுத்தும் மக்கள் மிகுந்த அசௌகரியங்களுக்கு உள்ளாவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அடப்பன் வீதி, யாழ்.4 ஆம் குறுக்கு வீதி, 2 ஆம் குறுக்கு வீதி, சப்பல் வீதி ஆகியவற்றில் பிற்பகல் வேளைகளில் வீதியை விளையாட்டுக் களமாக்கி ஒருசில இளைஞர்கள் போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்து வருவதாக அவ்வப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்து வருகின்றனர்.

போக்குவரத்து வீதி ஒழுங்குமுறைகளைப் பொலிஸார் வலியுறுத்திவரும் இக்கால கட்டத்தில் அதனை அசட்டை செய்யும் விதமாக இந்த இளைஞர்கள் வீதிகளில் பந்து மற்றும் பேணி விளையாட்டுக்களில் ஈடுபட்டு வருவதை சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை மேற்கொண்டு நிறுத்த வேண்டுமென மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (1-160)

## அதிசய வாழைப் பொத்தி



மல்லாகம் குளமங்காலில் உள்ள வீடொன்றில் உள்ள வாழைமரத்தின் பொத்தியொன்று நிலத்துக்குள்ளிருந்து வெளிவந்துள்ளது.

குளமங்கால் முருகன் தேவதாசன் என்பவரின் வீட்டிலேயே இவ் விசித்திரமான வாழைப்பொத்தி நிலத்திலிருந்து வெளிவந்துள்ளது. வீட்டுத் தோட்டத்தில் வாழை ஒன்றை நட்டதாகவும் அந்த வாழைக்கு அருகில் ஒரு வாழைக் குட்டி முளைத்ததாகவும் தொடர்ந்து பெரிய வாழையின் அடிமரத்தில் இருந்து சுமார் ஒரு அடி தூரத்தில் நிலத்திலிருந்து வாழைப் பொத்தியொன்று வெளிவருவதாகவும் தேவதாசன் தெரிவித்தார்.

இவர் வாழைப்பொத்தியை நான்கு புறமும் வேலி போட்டு பாதுகாத்து வருகின்றார். (50-86)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,மார்ச் 28

மூளாய் ஸ்ரீமுத்துக்குமாரசுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (204)

* * *

யாழ்ப்பாணம்,மார்ச் 28

யாழ்.அத்தியடி ஸ்ரீசிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் ஆலய வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் 6 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (204)

## ஆங்கில பாடச் செயலமர்வு

வேலணை,மார்ச் 28

தீவக வலயத்தில் ஆங்கிலபாட கற்பித்தல் திறன் விருத்திச் செயலமர்வு இன்று சனிக்கிழமை கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் தரம் 6 முதல் 11 வரை ஆங்கிலபாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஜி.வி.இராதாகிருஷ்ணன் கேட்டுள்ளார். (50-267)

## 'வேலைக்கு உணவு' திட்டம் மீண்டும் குடாநாட்டில் நடைமுறைக்கு வருகிறது

### தற்போதைய திட்டத்தை நிறுத்த உலக உணவு நிறுவனம் முடிவு

யாழ்ப்பாணம்,மார்ச் 28

யாழ்.மாவட்டத்தில் வேலைக்கான உணவுத் திட்டத்தை மீண்டும் உலக உணவுத்திட்ட நிறுவனம் நடைமுறைப் படுத்தவிருக்கிறது.

குறிப்பிட்ட வேலைகள் செய்பவர்களுக்கு உணவு வழங்கும் திட்டத்தை அந்த நிறுவனம் மேற்கொண்டு வந்தது. பின்னர் அத்திட்டத்தை நிறுத்தி தொழில் இழந்த குடும்பங்களுக்கு நிவாரணமாக உணவுப் பொருள்களை அந்த நிறுவனம் வழங்கி வந்தது.

மீண்டும் 'வேலைக்கு உணவு' என்ற திட்டத்தை நடைமுறைப்படுத்த அந்த நிறுவனம் முடிவு செய்துள்ளது.

யாழ்.மாவட்டத்தில் உலக உணவுத் திட்டம் எதிர்காலத்தில் வேலைக்கான உணவுத் திட்டத்தின் கீழ் மக்களுக்கு நிவாரணம் வழங்கவிருக்கிறது.

இதுவரை காலமும் உலக உணவுத் திட்டத்தின் கீழ் தொழில் பாதிக்கப்பட்டவர்கள் என்ற அடிப்படையில் இவ் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டு வந்தன.

தற்போது இத்திட்டம் மாற்றம் செய்யப்பட்டு இதன் பிரகாரம்-தமது பகுதிகளில் சில வேலைகளைச் செய்பவர்களுக்கு மட்டுமே [illegible] உதவிகள் [illegible] யாழ். [illegible] செயலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாகத் தமது பகுதிகளில் உள்ள வீதிகளைத் துப்பரவு செய்தல், குளங்கள், கால்வாய்கள் போன்றவற்றை துப்புரவு செய்தல் உட்பட மென்மையான பணிகளை மேற்கொள்பவர்களுக்கு உணவுத் திட்டத்தின் கீழான உதவிகளை வழங்கும்படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

உலக உணவுத்திட்ட உதவிகளைப் பெறுபவர்கள் எண்ணிக்கை-அதிகாரிகள், கிராம அலுவலர்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள் திட்டமிடல் செயற் [illegible] பொறுத்தே அமையும் எனப் [illegible] தெரிவிக்கிறார்கள். (1-68)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

## கேள்வி கோரல்

எமது சங்கத்தினால் ஆரம்பிக்கப்படவுள்ள சிறப்புக் கூட்டுறவு நகர்களுக்கு கட்டடம் திருத்தம் செய்தல், தளபாடம் கொள்வனவு செய்தல், வர்ணம் பூசுதல் போன்றவற்றுக்கான கேள்விக் கூறுகள் பொருத்தமானவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

இவை தொடர்பான விவரங்களை சங்கத் தலைமைக் காரியாலத்தில் பெற்று கேள்விக் கூறுகளை 03.04.2009 க்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரிலோ அல்லது பதிவுத் தபால் மூலமோ அனுப்பி வைக்கவும்.

*கண்டி வீதி,*
*சாவகச்சேரி.*

பொது முகாமையாளர்,
சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம்.

புங்குடுதீவு - நயினாதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

## கேள்வி கோரல்

எமது சங்கத்தில் சிறிய கூட்டுறவுநகர் அமைப்பதற்கு பின்வருவனவற்றுக்கான கேள்விக் கூறுகள் பொருத்தமானவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

01. திருத்தம் செய்தல் (கட்டடத் திருத்தம், வர்ணம் பூசுதல்)
    1. தல்லையப்பற்று கிளை இல.05 புங்குடுதீவு
    2. பெருங்காடு கிளை இல. 10 புங்குடுதீவு
02. தளபாட உபகரணங்கள்
    1. தளபாட உபகரணங்கள் (மரத்தினாலானவை)
    2. தளபாட உபகரணங்கள் (கண்ணாடி இழையிலானவை)

விவரங்கள் சங்கத் தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். கேள்விக் கூறுகளை நேரிலோ/பதிவுத் தபால் மூலமோ 04.04.2009 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கவும்.

பொது முகாமையாளர்,
புங்குடுதீவு - நயினாதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

## துயர் பகிர்கின்றோம்

எமது சக்கோட்டை ஆலயப் பங்குத் தந்தையாரின் பாசமிகு தந்தை மடுத்தீன் அவர்கள் இறைவனடி சேர்ந்ததை அறிந்து துயரடைவதோடு அன்னாரின் பிரிவால் துயருறும் பங்குத் தந்தைக்கும் அவரது குடும்பத்தார்க்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

ஆலய அருட்பணிச் சபை உறுப்பினர் (சூ.பி.சே.செல்வநாயகம்)
வழிபாட்டுக் குழு உறுப்பினர் (பி.ஜெயராணி) பீடப்பணியாளர் (பி.பசீலன்)
ஜெயா பல்பொருள் வாணிபம், சக்கோட்டை.

## துயருறுகின்றோம்

எமது தென்னிந்தியத் திருச்சபையின் யாழ்ப்பாணப் பேராயத்தின் பெண்கள் சங்கத்தின் தலைவி தயாளினி தியாகராஜா (பேராயரம்மா) அவர்களின் தாயார்

**திருமதி பரஞ்சோதி ராஜரட்ணம்**

22.03.2009 அன்று கனடா தேசத்தில் காலமான செய்தி கேட்டு வேதனையுறுகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அன்னாரின் இழப்பிற்கூடாக துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆதீன பெண்கள் சங்கம்,
தென்னிந்தியத் திருச்சபை, வட்டுக்கோட்டை.

## மரண அறிவித்தல்

### செல்வரத்தினம் தனநாயகம்

*(முன்னாள் இ.போ.ச.ஊழியர்)*



காரைநகர், மாப்பாணவூரியைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வரத்தினம் தனநாயகம் நேற்று முன்தினம் (26.03.2009) வியாழக்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வரத்தினம்-பாக்கியம் தம்பதிகளின் அருமை மகனும் காலஞ்சென்ற இராஜரட்ணம்-தெய்வானைப் பிள்ளை தம்பதிகளின் மருமகனும், தபோதினியின் அருமைக் கணவரும் அருணாசலம்(மலேசியா), இராஜதுரை(மலேசியா), திருமதி பத்மராணி சிவராஜா(மானிப்பாய்), தனபாலன்(டென்மார்க்), சறோஜினி(ஜேர்மனி), மாலினி(கொக்குவில்), ரவிச்சந்திரன் (ஜேர்மனி), ராகினி(கொக்குவில்), காலஞ்சென்ற அருட்செல்வம் மற்றும் இந்திராணி (கொழும்பு), இதயராணி (கொக்குவில்), திருச்செல்வம் (டென்மார்க்) ஆகியோரது அருமை மைத்துனரும், சாந்தினி (டென்மார்க்), குமுதினி(டென்மார்க்), துஷ்யந்தன் (ஜேர்மனி), ஜனார்த்தனன்(பிரான்ஸ்), நந்தினி(கொக்குவில்), கிருஸ்ணா (மலேசியா), ஆகியோரது அருமைத் தகப்பனாரும், மனோகரன் (டென் மார்க்), சத்தியலிங்கம் (டென்மார்க்), துதிவதனி (ஜேர்மனி) ஆனந்த குமாரி (பிரான்ஸ்), மதிமாறன்(கொக்குவில்), சுதாஜினி (மலேசியா) ஆகியோரின் அருமை மாமனாரும் சஞ்சீவன், பிரசாத், கணேஸ், லக்ஸ்மி, கேசவன், மாதவன், திவ்யா, பிரதீபன், எழினி, தேன்நிலா, இளநிலா ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நாகலிங்கம் வீதி,* **தகவல்:** ப.மதிமாறன் (மருமகன்) (060 221 0218).
*கொக்குவில் மேற்கு.* துஷ்யந்தன் (மகன்-ஜேர்மனி) (0049407097038?).

## சமய சந்நிதியில்

யாழ்ப்பாணம், மார்ச் 28

நயினாதீவு மலையடி ஐயனார் ஆலயத்தில் ஞானவேல் பிரதிஷ்டை கால்கோள் விழா நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப. 6.30 மணிமுதல் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் ஆன்மீக சொற்பொழிவு, ஆற்றுகையாளர் கௌரவிப்பு, விசேட ஆராதனைகள் இடம்பெறும். (1)

## நேர்முகப்பரீட்சை திகதி மாற்றம்

யாழ்ப்பாணம், மார்ச் 28

இலங்கை போக்குவரத்துச் சபையில் பட்டதாரிப் பயிலுனர்களைச் சேர்த்துக் கொள்வதற்காக எதிர்வரும் 31ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவிருந்த நேர்முகப்பரீட்சை நாளை மறுதினம் 30ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறும் என போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார்.

நாளை மறுதினம் கோண்டாவிலில் உள்ள வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் தலைமைக் காரியாலயத்தில் இந்த நேர்முகப்பரீட்சை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (50)

## குருநகரில் இன்று இறுதியாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 28

குருநகர் தூய வெற்றிநாயகி ஆலயத்தின் 16ஆவது வருட நிறைவை முன்னிட்டு குருநகர் தூய பியோ விளையாட்டுக்கழகத்தால் நடத்தப்பட்ட 7பேர் கொண்ட விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று சனிக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு யாழ். சென்றோக்ஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ். பிரதேச செயலர் மரியதாசன் ஜெகூவும் சிறப்பு விருந்தினராக யாகப்பர் ஆலய பங்குத் தந்தை அருட்திரு ஆர்.நேசராசா வும் கௌரவ விருந்தினராக யாழ். பிரதேச செயலகம் நிர்வாக உத்தியோகத்தர் ந.பாலசுப்பிரணியம் யாழ். உதைபந்தாட்ட லீக் தலைவர் சூ. அன்ரனிப்பிள்ளை ஆகியோரும் கலந்து கொள்வர்.

## முல்லைத்தீவிலிருந்து மேலும் 14 குடும்பங்கள் வந்தன

யாழ்ப்பாணம், மார்ச் 28

முல்லைத்தீவுப் பகுதியிலிருந்து மேலும் 14 குடும்பங்களைச் சேர்ந்த 36 பேர் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை அழைத்து வரப்பட்டனர்.

இவர்கள் நாவற்குளி பனை அபிவிருத்திச் சபை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள நலன்புரி நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவ் வளாகத்தில் ஓலைக் கொட்டில்கள் அமைக்கப்பட்டு வருவதால் பல குடும்பங்கள் தங்க வைக்கலாமென தெரிவிக்கப்பட்டது.

ஏற்னகவே மிருசுவில் திருக்குடும்பக் கன்னியர் மடம், கொடிகாமம் அ.த.க. பாடசாலை, கைதடி ஆயுள்வேத மாணவர் விடுதி, கைதடி சைவச் சிறுவர் இல்லம் ஆகிய நான்கு இடங்களில் நலன்புரி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (1-207)

## மகளிர் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 28

ஸ்ரீ பாலகதிர்காம ஆலய பாலசம்ரட்ஷணா சமூக நலனோம்பு மன்றத்தின் ஏற்பாட்டில் பெண்கள் மேம்பாட்டுத்துறை நடத்தும் மகளிர் தின நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பெண்கள் மேம்பாட்டுத்துறைத் தலைவர் திருமதி கலைவாணி விமலநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், நல்லூர் தெற்கு கிராம சேவகர் திருமதி ராகினி இராமலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (204)

* * *

யாழ்ப்பாணம், மார்ச் 28

சமூக அபிவிருத்தி மன்றத்தின் ஏற்பாட்டில் மகளிர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட கேக், ஐசிங் பயிற்சி வகுப்பில் பங்குபற்றிய மாணவிகளின் கண்காட்சியும், சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வுகள் இல.109, பருத்தித்துறை வீதி, நல்லூரில் இயங்கும் மேற்படி மன்றத்தில் நடைபெறவுள்ளன.

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் கடமையாற்றும் கிராமசேவையாளர் திருமதி கிருஸ்ணகலா நாகேந்திரநாதன் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (204)

## கண்ணீர் அஞ்சலி



எமது சங்கத்தின் பணியாளர்

### அமரர் நா.ஸ்ரீதரன்

அவர்களின் திடீர் மறைவை அறிந்து ஆழ்ந்த கவலையடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**உன்பிரிவால் துயருற்றிருக்கும்:**
யாழ்ப்பாணம், பல.நோ.கூ.சங்க ஊழியர் நலன்புரிச் சங்கம்,
யாழ்ப்பாணம், பல.நோ.கூ.ஊழியர்
சிக்கன சேமிப்பு கடனுதவி கூட்டுறவுச் சங்கம்.

யாழ்ப்பாணம், ப.நோ.கூ. சங்கம்.

## கண்ணீர் காணிக்கை



எமது சங்கத்தின் பணியாளர்

### அமரர் நா.ஸ்ரீதரன்

அவர்களின் திடீர் மறைவை அறிந்து ஆழ்ந்த கவலையடைவதோடு. அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

தலைவர்/ பணிப்பாளர்,
பொது முகாமையாளர்/ பணியாளர்கள்,
யாழ்ப்பாணம், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
யாழ்ப்பாணம் (வ-து).

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் சந்திரன்

*(உரிமையாளர், நியூ சந்திரா இன்டஸ்ரீஸ்)*



நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட ஆறுமுகம் சந்திரன் 26.03.2009 அன்று காலமானார்.

அன்னார் சசிகலாவின் அன்புக் கணவரும் ஜெகதா, நவலோஜினி, சுதர்சன், பகீரதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (28.03.2009) சனிக்கிழமை ந.ப. 12.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*209, நாவலர் வீதி,* **தகவல்:**
*யாழ்ப்பாணம்.* மனைவி, பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அ.தி.மு.க. கூட்டணியில் பா.ம.க.!

## 40 தொகுதிகளிலும் வெற்றி என ராமதாஸ் நம்பிக்கை

சென்னை, மார்ச் 28

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் 40 மக்களவைத் தொகுதிகளிலும் அ.தி.மு.க. கூட்டணி வெற்றி பெறும் என்றும் பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் கூறியுள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலில் அ.தி.மு. கவுடன் கூட்டணி சேர்வது என சென்னை யில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பா.ம.க. பொதுக்குழுக் கூட்டத்தில் வாக்கெடுப்பு நடத்தி முடிவு செய்யப்பட்டது. அதில் மொத்தம் பதிவான வாக்குகள் 2 ஆயிரத்து 581. அ.தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவான வாக்குகள் 2 ஆயிரத்து 453. தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவான வாக்குகள் 117.

கூட்டத்தில் நிறைவுரை ஆற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் பேசியவை வருமாறு -

தி.மு.கவினரின் செயல்களால் பா.ம.க. தொண்டர்கள் மனதளவில் காயப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். அதன் வெளிப்பாடு தான், அ.தி.மு.கவுடன் கூட்டணி என்ற முடிவு. 2004ஆம் ஆண்டு தி.மு.கவுடன் தேர்தல் உறவு தொடங்கியது. 2006இல் சட்டப் பேரவைத் தேர்தலில் 31 இடங்களில் போட்டியிட்டு 18 இடங்களில் வெற்றி பெற்றோம். 13 இடங்களில் திட்டமிடப்பட்டு தோற்கடிக்கப்பட்டோம்.

கூட்டணித் தர்மத்தை எந்த நிலையிலும் தி.மு.க. காப்பாற்றவில்லை. கூட்டணியில் இருந்து வெளியேற்றப்பட்ட பிறகும் கூட தி.மு.கவை ஆதரிக்கிறோம் எனச் சொன்னோம்.

குரு பேசினார் என்பதற்காக, எங்களை வெளியேற்றினார்கள். பின்பு, மத்திய அமைச்சர் டி.ஆர்.பாலு வந்து பேசினார். சமரசமாகச் செல்லலாம் என்றார். அதன் பிறகும், எங்களை உதாசீனப்படுத்தினார்கள்.

2001 சட்டப் பேரவைத் தேர்தலின் போது தி.மு.கவுடன் கூட்டணி வைக்க முயன்றோம். அப்போது, எங்களைக் கேவலப்படுத்தினார்கள்; கொச்சைப்படுத்தினார்கள். அதன்பின், அ.தி.மு.கவுடன் கூட்டணி வைத்து, 27 இடங்களில் போட்டியிட்டு 20 இடங்களில் வெற்றி பெற்றோம். அப் போது, நாங்கள் அ.தி.மு.கவுடன் விரும்பிப் போகவில்லை. போயஸ் தோட்டத்துக்கு தள்ளிக் கொண்டு போய்விட்டு விட்டீர்கள் எனக் கூறினேன்.

பா.ம.கவை அழிக்க, ஒழிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் தி.மு.கவின் செயற்பாடு இருந்தது. நகர்மன்ற உறுப் பினராகக் கூட, பா.ம.கவினர் வரக் கூடாது என்பதில் தி.மு.க. உறுதியுடன் இருந்தது. அது மிகப்பெரிய கசப்பாக இருந்தது. அதைத் திருத்த தி.மு.க. தலைமை தவறி விட்டது.

எங்களை வட மாவட்டக் கட்சி என்கிறார்கள். நாங்கள் முழுமையான வளர்ச்சியைப் பெற்ற கட்சி. 1967இல் இருந்து தமிழகத்தில் தேர்தலில் கூட்டணி அமைத்துத் தான் கட்சிகள் போட்டியிட்டு வருகின்றன. கூட்டணியில் கட்சிகள் மாறித்தான் இருக்கின்றன. 2006ஆம் ஆண்டு தி.மு.க. அணியில் இடம்பெற்ற கட்சிகள் இப்போது அதே அணியில் இருக்கின்றவா? அவர் களைப் பற்றி எதுவும் சொல்லவில்லை. எங்களை மட்டும் குறை சொல்கிறார்கள்.

நான், சென்னையில் 20 நாள்கள் தங்கி இருந்தேன். அப்போது, தி.மு.கவில் இருந்து என்னை யாரும் சந்திக்கவில்லை. ஒரு மாவட்டச் செயலாளரோ, சின்ன அல்லது பெரிய அமைச்சரோ என்னை வந்து சந்திக்கவில்லை.

ஒருவர் கூட என்னைச் சந்தித்து, கூட்டணியில் ஒன்றாக இருப்போம் எனக் கூறவில்லை. இந்த நிலையில்தான், என்ன முடிவு செய்யலாம் என்பதை பொதுக்குழு மூலம் எடுத்து இருக்கிறோம்.

கட்சியில் உள்ள லட்சக்கணக்கான தொண்டர்களின் முடிவு இது. நான் எதிர்பார்த்த முடிவு என்றாலும் கூட, வாக்கெடுப்பு மூலம் அந்த முடிவு எடுக்கப்பட்டு இருக்கிறது.

அ.தி.மு.கவுடனான எங்கள் கூட்டணி வெற்றிக் கூட்டணியாக இருக்கும். தமிழகம், புதுச்சேரியில் உள்ள 40 மக்கள வைத் தொகுதிகளிலும் இந்தக் கூட்டணி வெற்றி பெறும் - என்றார்.

## யாழ். வருவதற்கு கப்பலுக்கு காத்திருந்தவர் உப்புவெளிப் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம்,மார்ச் 28

திருகோணமலையில் கப்பல் பயணத்திற்கு காத்திருந்த வேளை யாழ். இளைஞர் ஒருவர் உப்புவெளிப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக அவரது தாயார் மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியைச் சேர்ந்த மகேந்திரராஜா பிரசாத் என்பவரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வெளிநாடு செல்வதற்காக கொழும்பு சென்ற இவர் பயண ஒழுங்கு சரிவராத நிலையில் யாழ்ப்பாணம் வருவதற்காக திருகோணமலையில் கப்பலுக்கு பதிந்து விட்டு தங்கியிருந்தார்.

அவரது உறவினரின் வீட்டில் வைத்து கடந்த 19 ஆம் திகதி இரவு 9.30 மணியளவில் உப்பு வெளிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். அவரை விடுவிக்க உதவ வேண்டும் என்று அவரது தாயார் தனது முறைப்பாட்டில் கேட்டுள்ளார். (1-25)

## கருணாநிதி நாள் குறித்தால் இலங்கை செல்லத் தயார்

### 'ஈழத்தமிழ் ஆதரவு ஓயாத அலை' நெடுமாறன் தெரிவிப்பு

சென்னை, மார்ச் 28

ஈழத் தமிழர்களுக்கு உதவ, தமிழகத்தில் இருந்து லட்சக்கணக்கான மக்களுடன் இலங்கை செல்ல நாம் தயாராக இருக்கிறோம். முதல்வர் கருணாநிதி அதற்குரிய நாளைக் குறிக்கட்டும் - என்று இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் பழ.நெடுமாறன் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து நேற்றுமுன்தினம் அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் இலங்கைக்கு படையெடுத்துச் செல்லட்டும். இங்கே யார் குறுக்கே நிற்கிறார்கள்?

அதற்காக தோணிகளை தயார் செய்யட்டும். அவை கள்ளத் தோணிகளாக இருந்தாலும் பரவாயில்லை. அவற்றில் படைகளை ஏற்றிச் செல்லட்டும் என்று கருணாநிதி கூறியுள்ளார்.

இப்போது இவ்வாறு கூறுபவர், கடந்த காலத்தில் என்ன செய்தார் என்பதை தமிழக மக்கள் நன்கு அறிவார்கள். 2007ஆம் ஆண்டு யாழ்ப்பாண மக்களுக்கு உணவு அனுப்பாமல் இலங்கை அரசு பட்டினிப் போட்டது.

அந்த மக்களுக்கு உதவ 2007 செப்ரெம்பர் 12ஆம் திகதி நாகை, இராமேஸ்வரம் ஆகிய இடங்களில் இருந்து படகுகள் மூலம் உணவு, மருந்துப் பொருள்களை ஏற்றிச் செல்ல நாங்கள் முயன்ற போது, எங்களுக்கு படகுகள் கொடுக்கக் கூடாது என மீனவர்களை மிரட்டி, எங்களைப் போகவிடாமல் தடுத்து கைது செய்தவர் இதே முதல்வர் கருணாநிதி என்பதை அவருக்கு நினைவுபடுத்துகிறேன்.

இவ்வளவுக்கும் நாங்கள் போர்ப்படை திரட்டிச் செல்லவில்லை. மனித நேயத்துடன் எங்கள் சகோதரத் தமிழர்களுக்கு உதவிப் பொருள்களை ஏற்றிச் செல்லத்தான் முயன்றோம்.

அதையே தடுத்தவர், இப்போது படகுகளில் ஏறி நாங்கள் செல்வதற்கு குறுக்கே நிற்கப்போவதில்லை எனக் கூறுவது உண்மையாக இருந்தால், தமிழ்நாட்டில் இருந்து லட்சக்கணக்கான மக்கள் ஈழத் தமிழர்களுக்கு உதவச் செல்வதற்குத் தயாராக இருக்கிறோம். முதல்வர் அதற்குரிய நாளைக் குறிக்கட்டும் என்றுள்ளது.

## புவியியற்றுறை விரிவுரையாளரை விடுவித்து யாழ். பல்கலை கல்வி நடவடிக்கை சுமுகமாக நடக்க உதவுக

### மாணவர் ஒன்றியம் கோருகிறது

யாழ்ப்பாணம், மார்ச் 28

கொழும்பில் காணாமற்போயுள்ள யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறை விரிவுரையாளர் செல்வராஜா ரவீந்திரனை விடுவித்து யாழ்.பல்கலைக்கழக கல்வி நடவடிக்கை சுமுகமாக நடைபெற உதவ வேண்டும்.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் மேற்கண்டவாறு சம்பந்தப்பட்டவர்களைக் கோரியுள்ளது.

ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:

எமது பல்கலைக்கழக புவியியற்றுறையைச் சேர்ந்த விரிவுரையாளர் செல்வராஜா ரவீந்திரன் கடந்த செவ்வாய்க் கிழமை கடத்தப்பட்ட சம்பவம் எம்மிடையே பலத்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகளை இந்த சம்பவம் பாதிக்கின்ற செயற்பாடாகும். தயவு செய்து எமது விரிவுரையாளரை மீட்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சகல தரப்பினரையும் வேண்டி நிற்கின்றோம்.

மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் உயர் பட்டப்படிப்பை மேற்கொண்டு வந்த எமது விரிவுரையாளர் கடத்தப்பட்டுள்ளார். எமது மாணவர்களின் கல்வி நலனும் பல்கலைக்கழகத்தின் இயல்பு நிலையும் இதனால் பாதிப்படைகின்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

கல்விச் சமூகம் மீது இவ்வாறான கொடுமையான நடைமுறைகளையும் அணுகுமுறைகளையும் மேற்கொள்வதைத் தவிர்க்கும்படி வேண்டுகிறோம். உடனடியாக அவரை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்து பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும்படி மாணவர் சமூகத்தினராகிய நாம் வேண்டி நிற்கின்றோம் - என் றுள்ளது.

## மரண அறிவித்தல்

### திருமதி பிரான்சிஸ் லூர்த்தம்மா (தங்கமணி)



புதுக்குடியிருப்பு, மாத்தளனைப் பிறப்பிடமாகவும் இரணைப்பாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பிரான்சிஸ் சேவியர் லூர்த்தம்மா (தங்கமணி) நேற்று (27.03.2009) வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிலிப்பு இசபெல் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான ஜேமிஸ்-எபிசேனியா தம்பதியரின் அன்பு மருமகளும் பிரான்சிஸ் சேவியரின் (துரைசிங்கம் - சேவியர் களஞ்சியம்) அன்பு மனைவியும் அற்புதம், தம்பிஐயா, சின்னத்துரை, அமரர் கிறகோரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் நல்லபிள்ளை, இராசாத்தி, மாணிக்கம், கிறேமா, அமரர்களான கென்றிகுணம், குமார் ஆகியோரின் மைத்துனியும் ஜேசுராசா, அமரர் எட்வேட்ராசா மற்றும் ஜெயராசா, யோகராசா, மேரிஇசபெல், ஜக்குலின், றெஜிவிஜிலா ஆகியோரின் பாசமிகு தாயாரும் புலோமினா (ஆசிரியை), இலங்கராணி, ஜெயரூட், சிபாற்றா (ஜேர்மனி), செல்வநாதன் (இலங்கை வங்கி, யாழ்ப்பாணம், 2ஆம் கிளை), மோகன்ராஸ் (பிரதேச செயலர், கோப்பாய்), யோகராசா (கணக்காளர் M.P.C.S) ஆகியோரின் அன்பு மாமியாரும் சுமணா, சுபீனா, டயானா, றியானா, நியூசன், காலஞ்சென்ற அகல்யா மற்றும் நிலுஜா, அகல்யன், றெக்சன், யூட்சன், ஜொய்சன், மெதுனா, விதுஷன், நிரோசன், தினேசன், சுபேசன், தேனுசன், வினுசன், மேரிஜானுசா, ஸ்ரெபனி, ஜெசிக்கா, ரதன், சுபேஷ்கா, செறோன், சம்சிகன், நிம்சிகா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதிக்கிரியைகளுக்காக நாளை (29.03.2009) ஞாயிற்றுக்கிழமை இல.8, செல்லர் லேன், செம்மணி வீதி, நல்லூரில் இருந்து காலை 9மணிக்கு பண்டத்தரிப்பு சென்.மேரிஸ், தேவாலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு சென்.மேரிஸ் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.ஏ.மோகன்ராஸ்,
வீ.செல்வநாதன்
(மருமக்கள்).

இல: 08, செல்லர் ஒழுங்கை,
செம்மணி வீதி, நல்லூர்.

## கண்காணிப்புக் குழுக் கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 28

சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களுக்கும் அரச சார் பற்ற நிறுவனங்களுக்கும் எதிர்வரும் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவிருந்த மாதாந்த மாவட்ட கண்காணிப்புக் குழுக் கூட்டம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. என்பதை சம்பந்தப்பட்ட அனைவருக்கும் சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (1)

## இந்திய எல்லைக்குள் நுழைந்த 34 இலங்கை மீனவர்கள் கைது

மண்டபம், மார்ச் 28

இந்திய சர்வதேச கடல் எல்லைப்பகுதிக்குள் நுழைந்து மீன்பிடித்த இலங்கையைச் சேர்ந்த 34 சிங்கள மீனவர்களை இந்தியக் கடலோர காவல் படையினர் கைது செய்தனர். அவர்களது 7 விசைப்படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 24ஆம் திகதி காலை 11 மணிக்கு, நாகபட்டினம் அருகே 7 விசைப்படகுகளில் 34 சிங்கள மீனவர்கள் மீன் பிடித்துக் கொண்டிருந்தனர். இந்திய சர்வதேச கடல் எல்லைக்குள் அவர்கள் நுழைந்துள்ளதை, அப்பகுதியில் ரோந்துப் பணியிலிருந்த இந்தியக் கடலோரக் காவல் படையினர் கவனித்தனர். அவர்களை கைது செய்து நேற்றுமுன்தினம் மண்டபம் கொண்டு வந்தனர். இரண்டு படகுளில் இருந்த தியாகரன்(வயது - 40), சிந்தகன் (வயது - 22), சுகந்தன் (வயது - 32), சந்திரசேனா (வயது - 41) உட்பட 34 மீனவர்களிடம் கியூ மற்றும் உளவுப் பிரிவுப் பொலிஸார் தீவிர விசாரணை நடத்தினர். 2 விசைபடகுகளில் எஞ்சின் பழுது காரணமாக மீனவர்கள் கரைக்கு வருவதில் தாமதம் ஏற்பட்டது.

## மரண அறிவித்தல்கள்

### செல்லத்துரை அம்பிகைபாலன்

பருத்தித்துறை, விஸ்வகுல லேனைச் சேர்ந்த செல்லத்துரை அம்பிகைபாலன் கொழும்பில் நேற்று (27.03.2009) வெள்ளிக்கிழமை காலமானார்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்: அ.சுரேஸ் (மகன்).

### திருமதி துரை இரத்தினம்மா (மணி)



கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் மஞ்சத்தடி, இணுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம்மா துரை 26.03.2009 வியாழக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - ஆச்சிமுத்து தம்பதியரின் மகளும் சிவமணி, சண்முகநாதன், பாலச்சந்திரன், கருணாமூர்த்தி (ஜேர்மனி), சிவகுமார், ஜெயக்குமார் ஆகியோரின் சகோதரியும் செல்வநாயகம்(Sri lanka Insurance) அருந்தவமலர், வசந்தகுமாரி (லண்டன்), இராசநாயகம் (சுவிஸ்), மகேந்தி ரராஜா(கனடா), யோகராஜா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் அரியராணி, காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் அசோகநாதன், ரஞ்சினி, புஸ்பராணி, சாந்தி ஆகியோரின் மாமியும் சசிகலா நிரூஜன்(லண்டன்), சசிகரன் (லண்டன்), காந்தரூபி (துளிர்கள் நிறுவனம்), வாசுகி (B.A.), புஸ்பமலர், உதயராசா (லண்டன்), பிரதா சுதர்சன் (லண்டன்), சுதாஜினி மோகனதாஸ் (சுவிஸ்), சுதர்சினி உதயன் (லண்டன்), சயந்தன் (லண்டன்), சுசி(லண்டன்), விஜிதா சுரேஸ் (கனடா), றஜிதா குகனேசன் (லண்டன்), நிரோஜன் (கனடா), நிஷா (கனடா), நிஷன் (கனடா), சோபி (கனடா) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (27.03.2009) வெள்ளிக்கிழமை மாலை பிற்பகல் 3.30 மணிக்கு அவரது வீட்டில் நடை பெற்றுப் பூதவுடல் காரைக்கால் இந்துமயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மஞ்சத்தடி,
இணுவில்.

தகவல்:
து.செல்வநாயகம்(மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணாவின் ஆதரவாளர் இருவர் கல்முனையில் சுட்டுக்கொலை

கொழும்பு, மார்ச் 28

அம்பாறை, கல்முனை, அன்னமலைப் குதியிலுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் அலுவலகம் மீது நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் இனந் தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக் கிப் பிரயோகத்தில் அங்கிருந்த கருணா வின் ஆதரவாளர்கள் இருவர் உயிரிழந் தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கட்சியின் அலுவலகமும் சேதமடைந் துள்ளது எனத் தெரியவருகிறது.

மோட்டார் சைக்கிளில் வந்த ஆயுதக் குழுவினரே இத்தாக்குதலை மேற்கொண்டு விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குலை தாமே நடத்தியதாக விடுதலைப்புலிகள் உரிமை கோரியிருப் பதாக பி.பி.ஸி தெரிவித்தது. (அ-சி)

## பங்கரவாதிகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளுடன் நடத்திய கலந்துரையாடலிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வரு மாறு:-

எந்த இனத்தைச் சேர்ந்தவர்களாக இருந் தாலும் நாட்டில் வாழ்கின்ற மக்கள் எமது மக்கள். அவர்களுக்கு தேவையானவற்றை வழங்குவது எனது நோக்கமாகும்.

இந்நிலையில் வடக்கு மக்களுக்கான ஜனநாயக உரிமையைப் பெற்றுக்கொடுப் பதற்கு ஒன்றிணையுமாறு தமிழ் மக்களை பிரநிதித்துவப்படுத்தும் சகல அரசியல் கட்சிகளிடமும் வேண்டுகோள் விடுக் கிறேன்.

வடக்கின் தற்போதைய சுமுக நிலை மைகள் தொடர்பில் கலந்துரையாடுவ தற்கு தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பல முறை அழைப்பு விடுத்தபோதும் பயங்க ரவாதிகளின் அழுத்தம் காரணமாக அவர் கள் இந்த பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளவில்லை.

தமிழ் மக்கள் மீது உண்மையான அன்பு இருக்குமாயின் அவர்கள் நலன்புரி விட யங்கள் தொடர்பில் கலந்துரையாடப் படும் பேச்சுவார்த்தைகளில் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சகல அரசி யல் கட்சிகளும் கலந்துகொள்ள வேண் டியது முக்கியமானதாகும் என்று நான் கருதுகின்றேன்.

தமிழ் மக்கள் மீது உண்மையான அன்பு இருக்குமாயின் பலவந்தமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள அப்பாவி தமிழ் மக் களை விடுதலை செய்து பாதுகாப்பு தரப் பினரை எதிர்கொள்ளுமாறு புலிகளுக்கு கூறுகின்றேன் -என்றார். (அ-1)

## போர் இடைவெளி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை விவகாரம் குறித்து ஐ.நா வின் பாதுகாப்புச் சபையின் சம்பிரதாய பூர்வமற்ற - உத்தியோக பூர்வமற்ற -விவா தம் மூடிய கதவுகளுடன் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

அதன்பின்னர் நடைபெற்ற செய்தியா ளர் மாநாட்டில் ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான விவகாரங்களுக்கான அதி காரி ஜோன் ஹோம்ஸ் மனிதாபிமான போர் இடைவெளி ஒன்றுக்கு இரண்டு தரப் புகளும் சம்மதிக்கவேண்டும் என்று கேட் டுக் கொண்டார்.

இந்தக் கோரிக்கையை அமெரிக்கா வின் ஐ.நா பிரதிநிதி றோஸ் மேரி டிக் காசோவும் பிரிட்டனின் சிரேஷ்ட பிரதி நிதி ஜோன் சர்வஸும் ஆதரித்துக் கருத்து வெளியிட்டனர்.

ஊடகவியலாளர் மாநாட்டில் அரசாங் கப் படைகள் பாதுகாப்பு வலயத்திலுள்ள பொது மக்கள் மீது தாக்குதல் நடத்தி வருவதாக கண்டனம் வெளியிடப்பட்டுள்ளதுடன் அதேநேரம் விடுதலைப் புலிகளும் மக் களை வெளியேற விடாது தடுப்பதாகவும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

கடந்த ஜனவரி மாதம் 20 ஆம் நாளில் இருந்து இது வரை பொதுமக்கள் 2,800 பேர் படையினரின் ஷெல் வீச்சில் கொல் லப்பட்டிருப்பதாகவும், மேலும் பல்லாயிரக் கணக்கான மக்கள் காயமடைந்திருப் பதாகவும் ஐக்கிய நாடுகள் சபை கூறு கின்றது.

பாதுகாப்பு வலயத்தில் உள்ள பொது மக் கள் மீது தாக்குதல் நடத்த் மாட்டோம் என இலங்கை அரசு தமக்கு உறுதி மொழி வழங் கியிருந்த போதிலும், பொதுமக்கள் மீதான தாக்குதல்கள் நிறுத்தப்படவில்லை என அமெரிக்கா கண்டனம் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபி மான நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான கலாநிதி ஜோன் ஹோம்ஸ் ஐக்கிய நாடு கள் சபைக்கான அமெரிக்காவின் துணைத் தூதுவர் றோஸ்மேரி டிக்காசோ ஐக்கிய நாடு கள் சபைக்கான பிரித்தானியத் தூதுவர் ஜோன் சவர்ஸ் ஆகியோர் இந்த ஊடகவிய லாளர் மாநாட்டில் கருத்துக்களை வெளி யிட்டிருந்தனர்.

பாதுகாப்பு வலயத்தில் பெருமளவி லான மக்கள் தஞ்சமடைந்துள்ள நிலை யில், அந்தப் பகுதிகளை நோக்கி சிறி லங்கா படைகள் ஷெல் தாக்குதலை நடத்தி வருவதாகவும் இது தொடர்பாக அமெ ரிக்கா ஆழ்ந்த அக்கறை கொண்டிருப்ப தாகவும் கூறிய அமெரிக்கத் தூதுவர் றோஸ் மேரி, படையினர் வீசும் ஷெல்கள் மருத்துவமனைகள் மற்றும் பொதுமக்கள் அதிகம்கூடும் இடங்களில் வீழ்ந்து வெடிப்பதாகவும் தெரிவித்தார். (அ-ப)

## இலங்கைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராமநாதபுரம் மாவட்டம், உச்சிப்புள் ளியில் சகல வசதிகளும் கொண்ட 'பருந்து' விமானத் தளம் ஒன்றை திறந்து வைத்த பின்னர் கடற்படைத் தளபதி சுரேஷ்மேத்தா செய்தியாளரிடம் பேசினார்.

இலங்கையில் இப்போது நடைபெற்று வரும்போர் இந்தியாவுக்கு கவலை தருவதோடு அக்கறை கொள்ளவும் வைத்துள்ளது.

'பருந்து' விமானத் தளத்தை இராம நாத புரம் கடற்கரை ஓரத்தில் நிறுவுவதற்கு விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல் உள்ள தாக கருதப்படுவதும் ஒரு காரணம் என் பது உண்மைதான்.

ஆயினும் அச்சுறுத்தல்களுக்காக இந் தியக் கடற்படை தனது திட்டங்களை வகுப் பதில்லை. காலத்துக்குக்காலம் மாற்ற முறும் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டே, தனது திட்டங்களை வகுத்து செயற்படுகிறது. அவை நீண்ட காலத் திட்டங்களாகவும் அமையும். குறுகிய காலத்திட்டங்களாகவும் அமையும்.

கச்சதீவை இலங்கை அரசாங்கம்புனித பிரதேசமாக பிரகடனப்படுத்த உள்ளதாக செய்திகள் வந்திருப்பது உண்மைதான். அதனால் இந்திய மீனவர்களின் மீன்பிடிக் கும் உரிமை மறுக்கப்படலாம் என்று கூறப்படுவதை ஏற்றுக் கொள்ளமுடியாது. கச்சதீவு நல்லெண்ணத்தின் பேரிலேயே இலங்கைக்கு இந்தியாவினால் வழங் கப்பட்டது. அந்த உடன்படிக்கையின் பிர காரம் இந்திய மீனவர்கள் அங்கு விசேட தேவைகளுக்கு விஜயம் செய்யமுடியும் என்று - கூறினார் கடற்படைத் தளபதி அட்மிரல் சுரேஷ் மேத்தா. (அ)

## புலிகள் வசம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளும் உறுதிப்படுத்தியுள்ளன என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்குப் புறம்பாக சிறிய விமானத் தைத் தயாரிப்பதற்கான உதிரிப்பாகங் களையும் விடுதலைப்புலிகள் கொண்டு வந்துள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் வசம் விமா னம் இருப்பதாக வெளிவந்த தகவலை அடுத்து கொழும்பின் பாதுகாப்பு அதிஉச்ச நிலையில் வைக்கப்பட்டுள்ளது என்றும் செய்தி ஏஜன்ஸி தெரிவித்தது. (அ-1)

## புதுக்குடியிருப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படையினர் சண்டையிட்டு வருகின்றனர் என் றும் படைத்தரப்பு மேலும் அறிவித்துள்ளது.

வியாழக்கிழமை நடைபெற்ற நீண்ட நேரச் சண்டையைத் தொடர்ந்து படை யினர் மேற்கொண்ட தேடுதலில் விடுத லைப் புலி களின் 13 சடலங்கள் கைப்பற்றப்பட்டன. அத் துடன் ஆயுதத் தளபாடங்களும் மீட்கப்பட் டன என்றும் பாதுகாப்புத் தரப்பு தெரிவித்தது.

புதுக்குடியிருப்பில் படையினரின் சினப் பர் தாக்குதலில் விடுதலைப் புலி உறுப்பினர் கள் 16 பேர் கொல்லப்பட்டனர் என்றும் படையினருக்கு சிறு காயங்கள் ஏற் பட்டன என்றும் படைத்தரப்பு மேலும் கூறியுள்ளது.

## 18 மெற்றிக் தொன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியனவும் அனுப்பப்படுவதாக அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார்.

பொருள்களை ஏற்றும் பணிகள் நேற்று மாலை பூர்த்தியடைந்து விட்டன என்றும்- லொறிகள் இன்று தெற்கு நோக்கிப் புறப் படும் என்றும் - அவர் மேலும் தெரிவித்தார்.

## 'உதயன்' மீதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மான தாக்குதல்களுக்கு 'உதயன்' பத்திரிகை முகம் கொடுத்துள்ளது.

'உதயன்' பத்திரிகையின் ஆசிரியர் என்.வித்தியாதரன் தடுப்புக்காவலில் வைக் கப்பட்டுள்ள நிலையில் அவரது பத்தி ரிகைக்குக் குண்டுத்தாக்குதல் நடத்துவதன் மூலம் அச்சத்தை ஏற்படுத்தி சமூகத்தை ஊமை யாக்க சம்பந்தப்பட்ட தரப்புக்கள் எதிர் பார்க்கின்றன. இதுபோன்ற கொடூரமான முயற்சிகளைத் தோற்கடித்து இலங்கைக் குள் ஜனநாயகத்தை பலப்படுத்துவதற்கு அரசியல் கட்சிகள், சமூக அமைப்புகள் ஆகிய வற்றுக்கும் பொறுப்புள்ளதென்பதை ஞாப கப்படுத்துகின்றோம். குண்டுத்தாக்குதல் இடம்பெற்றபோது அங்கிருந்த பொலிஸ் அதிகாரி காயமுற்றமை தொடர்பாக எமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின் றோம் - என்றுள்ளது.

## நேற்றைய கரும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யத்தளங்கள் வெளியிட்ட தகவல்கள் வரு மாறு:-

நேற்று நடத்தப்பட்ட தாக்குதலில் 20 வயதுடைய 8மாதக் கர்ப்பிணிப் பெண் ணான சந்திரகுமார் கலைச்செல்வி காய மடைந்து வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை பலனளிக்காத நிலையில் உயிரிழந்தார். 27வயதுடைய 6மாதக் கர்ப்பிணிப் பெண்ணான ஜெக தீபன் சோதிமலர் , 25வயதுடைய 9மாதக் கர்ப்பிணியான க.பாசமலர் ஆகியோர் காய மடைந்து ஆஸ்பத்திரியில் சிக்ச்சை பெற்று வருகின்றனர்.

மேலும் 3 கர்ப்பிணிப் பெண்கள் சம் பவ இடத்திலேய கொல்லப்பட்டனர். அவர் களின் பெயர்விவரம் தெரியவரவில்லை.

மாத்தளன் கப்பல் வீதியில் செஞ் சிலுவைச் சர்வதேசக்குழுவின் பணியாள ரான பாலசிங்கம் சதீஸ்குமார் (வயது 27) காயமடைந்துள்ளார்.

நேற்றுக் கொல்லப்பட்டவர்களில் அடை யாளம் காணப்பட்டவர்களின் பெயர் விவ ரம் வருமாறு:

கருணாகரன் சாரதாதேவி (வயது 40), நீக்கிலாப்பிள்ளை லைனாரட்ணராஜா (வயது 47) ,சரவணமுத்து கணபதிப்பிள்ளை (வயது 65), அந்தோனி அருளானந்தம் (வயது 64), ஜசிந்தா (வயது 19), சிறிகாந் தன் யதுர்சன் (வயது 13), இராசதுரை வசந் தகுமார் (வயது 36), வேலுப்பிள்ளை இரத் தினசிங்கம் (வயது 48), நடராசா ராகினி (வயது 40), சண்முகநாதன் இராசயோகம் (வயது 40), சிறிதரன் ஜெகதீஸ்வரி (வயது 35), ஞானசீலன் கோகிலா (வயது 16), தங்கவேலு கிருஸ்ணமூர்த்தி (வயது 49), வசந்தகுமார் நந்தினி (வயது33), கலைச் செல்வி (வயது 20) ,யோகராசா புஸ்ப ராணி (வயது 40), சந்திரசேகர் சசிகுமார் (வயது 25), வியஜ குமார்தமிழினி (வயது 02), மகாலிங்கம் தேனஜா (வயது 32), சசிக்குமார் சுதாநந்தினி (வயது 35) ,சிவன்பன் ஜானகி (வயது 20), கணேஸ் சந்திரமோகன் (வயது 39), சிவகுமார் உதயமலர் (வயது 38), தர்மலிங்கம் பத்மாவதி (வயது 40), பஞ்சாட்சரம் (வயது 40), கிருசிகா (வயது 09), இராசதுரை வசந்தகுமார் (வயது 36), சிறிதரன் கேதீஸ்வரி (வயது 25) , சிறிகாந் தன் யதுசன் (வயது 13), யோகராசா புஸ் பராணி (வயது 40), மெய்யழகன் வசந் தினி (வயது 25), இராசதுரை ரஞ்சினி (வயது 23), சுதந்திரராசா இராசாத்தி (வயது 50), செல்வலிங்கநாதன் கிருசிகா (வயது 09), சுப்பிரமணியம் திருநாவுக் கரசு (வயது 08), வேலாயுதம் சுதர்சினி (வயது 11), வேலாயுதம் மகேஸ்வரி (வயது 48), பரமாநந்தம் முத்தலிங்கம் (வயது 48), தர்மலிங்கம் பத்மாவதி (வயது 40), சிவகுமார் உதயமாஸ் (வயது 38), பஞ் சாட்சரம் (வயது 40), வேலாயுதம் தாரணி (வயது 21), செல்வரட்ணம் தியாநேசன் (வயது 43), கணேஸ் கமலேஸ்வரி (வயது 46), செல்லத்துரை யோகேஸ்வரன் (வயது 55) ,சந்திரகுமார் கலைச்செல்வி (வயது 08 மாதங்கள்), சுப்பிரமணியம் சுஜிபா (வயது 11), சரவணமுத்த செல்லத் துரை (வயது 48) ,செல்வலிங்கம் (வயது 55), தங்கராசா யொகேஸ்வரி (வயது 39), சரண்யா (வயது 12) ,பாய்க் கியம் (வயது 45), சந்திரன் கௌரியம்மா (வயது 29), அருளானந்தம் அந்தோனி (வயது 75), நடராசா ராசகிளி (வயது 35),அப்பன் ராசயோகம் (வயது 40), சிறிதரன் ஜெகதீஸ் வரி (வயது 30), கணேஸ் கிருபாகரன் (வயது 16), செல்வராசா மனோன்மணி (வயது 70), பெரியசாமி தமிழ்ச்செல்வி (வயது 13), ஒன்றரை அகவை கார்த்திகா (வயது 02).

(அ-1)

## மரண அறிவித்தல்

### அப்பாத்துரை ஸ்ரீரங்கநாதன்



உடுப்பிட்டியைப் பிறப்பிடமாக வும், வாழ்விடமாகவும் கொண்ட அப்பாத்துரை ஸ்ரீரங்கநாதன் செவ் வாய்க்கிழமை 24.03.2009 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அப் புத்துரை மற்றும் பூபதி அம்மா ஆகியோரின் அன்புப் புதல்வனும், நமசிவாயகம் - தெய்வானைப் பிள்ளை ஆகியோரின் மருமகனும், இரத்தினேஸ்வரியின் அன்புக் கணவரும், சுகன்யா(பேராதனைப் பல்கலைக் கழகம்), யசோதரன்(கனடா), கமலதாசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், புஸ்பா (கனடா), லோகராணி (சுவிஸ்), ஆகியோரின் அன்புச்சகோதரனும், லோகநாதன் (கனடா), லோகநாதன் (சுவிஸ்), மகாதேவன் , ஸ்ரீவாமதேவன் (கனடா), சகாதேவன், வாமதேவன் (சுவிஸ்), இராஜேஸ்வரி (லண் டன்) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.03.2009) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத் தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்வை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*செல்வம் மில் வீதி,*
*இமையாணன் மேற்கு,*
*உடுப்பிட்டி.*

தகவல்:
குடும்பத்தினர்.

வாங்கி விட்டீர்களா?
தரம் 1-5
மாணவர்களுக்குரிய
மார்ச்- ஏப்ரல்
மாத இதழ்கள்
அம்மா
அன்னை
தாய்
அறிவு
தேடல்
கற்சுமி நாவலர் வீதி,
T.P. 222 7442

Jaffna College
Certificate Course in English
*. ஆற்றலுக்கேற்ப குழுக்கள் தெரிவு செய்யப்படும்
*. வகுப்புக்கள் வார மற்றும் வார இறுதி நாட்களில் நடைபெறும்
Batch I :- Week day Batch 8.30-12.30
Batch 11 :- week end Batch 8.00-12.00
Batch 111 :- week end Batch 12.30-3.30
Course commencing on
03-04-2009 8.30 am Week day batch
04-04-2009 8.00 am Week end batch
Furthur Detail
Director
Jaffna College Undergraduate Dept.
464, hospital Road,
Jaffna

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.03.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.